
# சந்நிதி

பல்சமய காலாண்டிதழ்

பங்குனி '99






சிவகாமி அம்மாள்
பப்ளிகேஷன்ஸ்



"Religions are many but the road is the same;
Flowers are many but, worship is the same;
Professions are many, but, living is the same."

*-Sai Baba*

# SHINY TRADERS

MANUFACTURERS OF

**Paper Cups, Paper Plates, Flat C. R. Books, Exercise Books, Monitor's Exercise Books & Stationery Items**

**64C, PEER SAIBO STREET,
COLOMBO - 12.**

**Tel : 330443
435556**

# Shrine
# சந்நிதி

பல்சமய காலாண்டிதழ்

மலர் 2 இதழ் 5

மாசி – பங்குனி 1999

ஆசிரியர்
வே.வரதசுந்தரம்





வெளியீட்டாளர்கள்
சிவகாமி அம்மாள் பப்ளிகேஷன்ஸ்



39, 36வது ஒழுங்கை
கொழும்பு – 06
இலங்கை
தொலைபேசி: 596253


## ஆன்மீக நெஞ்சங்களே !

ஆங்கிலக் கவிதை ஒன்றில் வரும் கதாபாத்திரம் இபின் பட்டுட்டா. இவன் மனித நேயம் மிக்கவன். மாதா கோயிலுக்குத் தவறாது செல்பவன். ஒருநாள் அதிகாலை கோயிலில் பிரகாசமான ஒளியின் கீழ் பட்டியலும் பேனாவும் கையுமாக ஒரு தேவதை. இருவரும் கதைத்துக் கொள்கிறார்கள்..

தேவதையே! இது என்ன பட்டியல்? இறைவனை நேசிக்கும் பக்தர்களின் பெயர் பட்டியல்.

அப்படியானால் என் பெயர் அதிலுண்டா? இல்லை.

மறுநாள் அதிகாலையும் ஒரு பட்டியலுடன் அதே தேவதை. இபின் இன்றும் விசாரித்தான்.

தேவதையே! இது என்ன பட்டியல் ?

இது இறைவனை நேசிக்கும் பக்தர்களின் பட்டியல்

அப்படியென்றால் இதில் என் பெயர் உண்டா?

என்று கேட்டவாறு பட்டியலை நோட்டம் விட்டான் இபின். என்ன அதிசயம்!

இபின் முதலாவது பெயர்.

அன்னை திரேசா தெருவில் நோயில் உழன்று கொண்டிருந்த ஒரு வயோதிபரை தனது விடுதிக்குக் கொண்டு சென்றார். அவரைக் குளிப்பாட்டினார். அவருடைய புண்களுக்கு சிகிச்சை அளித்தார். ஆடை அணிந்தார். பசியாற உணவு ஊட்டினார்.

"தெருவாரந்று பாசம் என்றால் என்னவென்று புரியாது சாக்கடையில் வாழ்ந்தேன். இன்று நேசிக்கப்பட்டு, அன்பின், அரவணைப்பின் கதகதப்பினைப் பெற்று இளவரசர் போல் சாகிறேன்" என்று கூறிப் புன்முறுவல் பூத்தபடியே மரணத்தைத் தழுவினார் அந்த வயோதிபர். இத்தகைய புன்முறுவலை நான் வாழ்நாளில் பார்த்ததே இல்லை என்று கண்கலங்கினார் அன்னை திரேசா.

எனவே இறைவனை நேசிப்பதிலும் பார்க்க, இறைவனால் நேசிக்கப்படும் அருகதையுடையவர்களாக நாம் மாற வேண்டும். இது ஒரு ஆன்மீக சாதனை. நாம் ஒவ்வொருவரும் இபின் பட்டுட்டாவாக மாறவேண்டும். அதனாலன்றோ இவ்வாண்டினை பகவான் பாபா பிரேமை அன்புக்குரிய ஆண்டாக பிரகடனஞ் செய்துள்ளார்.

இதனைத் தமிழ் மந்திரம் அழகாகச் சொல்கிறது. நடமாடும் கடவுளர்களான மனிதருக்குச் செய்யும் சேவை படத்தில் உள்ள இறைவனுக்குச் செய்யும் திருப்பணியாகும்.

நடமாடும் நம்பர்க்கு ஒன்று ஈகில்
படமாடும் பரமர்க்கும் அதுதானே!

நும்பணியில்
வே.வரதசுந்தரம்
ஆசிரியர்

# சோக்கிரட்டீஸ் சுவட்டில் சந்நிதி

நான் ஏதேன்ஸ் நகரத்து அல்லது கிரேக்க தேசத்து குடிமகனன்று. நான் சர்வதேச குடிமகன் – இப்படிக் கூறினார் பேரறிஞர் சோக்கிரட்டிஸ்.

சந்நிதி சஞ்சிகையும் இத்தகைய உலகலாவிய சிந்தனைகளைக் கொண்ட களஞ்சியமாகத் திகழ்கிறது. ஒரு குறிப்பிட்ட மதத்தை பரப்பாமல் அனைத்து உலக மக்கள் குழாமையும்தழுவிய அன்பு நெறியை பரப்புகிறது. பேரறிஞர் சோக்கிரட்டிஸின் சுவடுகளைப் பின்பற்றி பணி செய்கின்ற சந்நிதியை வாழ்த்துகிறேன்.



பிரதிப் பணிப்பாளர்
சுங்கத் திணைக்களம்

ஆர்.சிவராஜா

# தொடர்ந்து மலரட்டும்

சந்நிதி இதழைப் பார்த்தேன். அது ஒரு நல்ல முயற்சி. அது தொடர்ந்து மலர வேண்டும் என்பதே எமது அவா. சந்நிதி தாங்கி வரும் ஆக்கங்கள் இறை நம்பிக்கை உடையவர்களுக்கு பயன் அளிக்கும். இந்த முயற்சியில் ஏற்படும் இடையுறுகளுக்கு முகம் கொடுத்து சந்நிதி முன்னேற இறைவன் அருள்வானாக.


பிரதேச முகாமையாளர்
மக்கள் வங்கி மட்டக்களப்பு

எஸ் சீவரட்ணம்

# பாபாவை பிரார்த்திக்கின்றேன்

அருமையானதொரு சஞ்சிகையினை இலங்கையிலிருந்து வெளியிட்டு வருகிறீர்கள். மிகவும் பாரட்டத்தக்க முயற்சி ஒவ்வொரு இதழையும் வெளிக்கொண்டு வருவது பெரும் கடின உழைப்பை வேண்டி நிற்கும் என்பது வெள்ளிடை மலை.

உங்கள் முயற்சி சிறந்து ஓங்க பகவான் பாபாவை மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.



லண்டன்

சதானந்தன் மனோராஜ்

# இறைவனை இறைஞ்சுகிறேன்

இன்று ஈழத்தில் சஞ்சிகைகள் தமிழக இதழ்களுக்கு ஈடாக வெளிவருகின்றன. சந்நிதி அமைப்பில் ஈழத்து இதழ்களுள் நான் பார்த்தவற்றுள் முதன்மையாகத் திகழ்கிறது. தரமாகவும் அமைந்துள்ளது. பக்தி நெறியும் ஆய்வும் இணைந்துள்ளன. மேலும் தர முயர இறைவனை இறைஞ்சுகின்றேன்.



திருப்பெருந்துறை
நாயன்மார்கட்டு
யாழ்ப்பாணம்

மயிலங்கூடலூர்
பி.நடராசன்

திருக்கோணேசர்  ஆலய பரிபாலன சபை

சந்நிதி பல்சமயக் காலாண்டிதழ் இரண்டாவது ஆண்டில் தன் கால்களைப் பதித்து சேவையாற்றுவது கண்டு ஆன்மீக நண்பர்கள் பெரு மகிழ்வடைவார்கள்.

சந்நிதி சிவகாமி அம்மாள் பப்ளிகேஷன்ஸின் வெளியீடாகும். சிவகாமி அம்மாளின் நினைவில் உருவாக்கப்பட்ட அமைப்பு அது. சிவகாமி அம்மாவை நீண்ட நாட்களாக அறிந்தவன் என்ற வகையில் நான் இரண்டு மடங்கு மகிழ்வடைகிறேன். வெள்ளைச் சேலை அணிந்து நெற்றியில் திருநீற்றுப் பூச்சுடன் எந்நேரமும் காணப்படுவார். திருகோணமலை பத்ரகாளி அம்மனின் பக்தையாக தன் வாழ் நாளை கழித்தவர்.


சந்நிதி அன்னார் பெயரில் தொடர்ந்து ஆன்மீகப் பணியை ஆற்ற கோணேசப் பெருமான் அருள்புரிவாராக.



மு.கோ.செல்லராஜா
தலைவர்

ஓம்!ஓம்!ஓம்! என்றே ஓங்கார மணிநாதம்
ஓங்கியே ஒலிக்குது உலகம் உய்ந்திட
போம்போம் பாவமென்றே புகழுது மணிநாதம்
ஆம்ஆம் என்றதனை ஆமோதிக்கும் அலைகள்!

அம்மை சந்நிதியருகே அமைந்தமணிக் கோபுரத்தில்
அழகுறவே ஆடிநிற்கும் அற்புத மணிபாரீர்!
இம்மை மறுமைப்பயன் எய்தவிங்கு வாரீரென
இயம்புதே மணிநாதம் ஏற்றமுற நாம்வாழ

# சங்கதிகள்  சொல்லுதே

கந்தங் கமழ் கோயிலில் கண்டாமணி ஒலிக்குதே
எந்தவேளை எதுவரினும் இறையருள் காக்குமென்று
சந்தமுடன் ஒலிக்கும் மணி சங்கதிகள் சொல்லுதே
அந்தமிலா ஈசர்பதம் வந்தணைவீர் என்குதே

தேமாம் பொழில்சூழ் தென்கைலை ஈசன்
தூமாமனச் சோதியன் திருக்கோணை நாதன்
தாம்தோம் எனவாடுந் திருநடனஒலி யோவென
டாங் டாங் எனக்கண்டா மணிநாதங் கேட்குதே



மணிமேகலை கார்த்திகேசு

# உள்ளது ஒரே மதம் அது அன்பு மதம் தான்



தங்களுக்கு பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாவில் பற்றும் ஈடுபாடுமஏற்படுத்திய காரணி என்ன என்பதை கூறுவீர்களா?

ஸ்ரீ சத்யசாயிபாபா-ஒரு அவதார புரு'ர் எனவும் கலியுகத்தில் நடமாடும் தெய்வம் என்றும் உணர்ந்ததே காரணம் அண்மையில் தாங்கள் இந்தியா சென்று வந்திருக்கிறீர்கள். இந்தப் பயணத்தின் முக்கிய குறிக்கோள் என்ன?

பகவான் வெளிநாடுகளிலுள்ள சத்தியசாயி நிலையங்கள், மண்டலிகள் ஆகியவற்றின் தலைவர்களை புட்டபர்த்தியில் இடம்பெறும் கருத்தரங்கிற்கு அழைத்திருந்தார். மட்டக்களப்பு சத்யசாயி நிலையத் தவிசாளர் என்ற வகையில் சென்றிருந்தேன்.சாயிசமித்தித் தலைவர்கட்கு பகவான் அருளிய ஆலோசனைகள் என்ன?

பகவான் தலைவர்களுக்கு அருளிய ஆலோசனைகள்:-

ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் கடைப்பிடியுங்கள்
உண்மையாக இருங்கள்
தன்னலமற்ற சேவை செய்யுங்கள்
எல்லாப் பிளவுகளையும் பிறேமையினால் தீர்த்துக் கொள்ளுங்கள்
மனித மேம்பாடுகளைக் கடைப்பிடியுங்கள்
இறைவன் காட்டிய வழியில் செல்ல சங்கற்பம் செய்யுங்கள்
வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் இருங்கள்
கடமையைச் சரிவரச் செய்யுங்கள்.

சாயி அடியார்கட்கு வழங்கிய பிறந்த தின செய்தி என்ன?

எனக்குப் பிறந்த தினம் இல்லை. நீங்கள் எல்லோரும் எப்போது மகிழ்ச்சியுடன் இருக்கின்றீர்களோ அனறே எனக்குப் பிறந்த நாளாகும் உங்கள் ஆனந்தம் அன்பு தியாகம் தவிர எதையும் நான் விரும்பவில்லை.

உலகம் முழுவதும் சாயி அடியார்கள் வருவதைப் பார்க்கும் போது சாயி சமயம் புதிதாக உருவாகி விடும் போலிருக்கிறது இது பற்றி தங்கள் கருத்தென்ன?

சாயிசமயம் ஒன்று புதிதாக உருவாவதற்கு இடமே இல்லை. பகவான் எல்லாச் சமயத்தையும் மதிப்பவர் மட்டுமன்றி எச்சமயத்தைச் சேர்ந்தவரும் தங்களின் சமய விதிகளுக்கு அடிபணிந்து ஒழுகுவதையே விரும்புகிறார். எல்லாச் சமய வழிபாடுகளும் ஈற்றில் ஒரே கடவுளைத்தான் சென்றடையும் என்பதை பாபா நன்கு விளக்குகிறார். அவருடைய கூற்றின் பிரகாரம் ஓர் இந்து சிறந்த இந்துவாகவும், ஒரு முஸ்லிம் சிறந்த முஸ்லிமாகவும், ஒரு கிறிஸ்தவன் சிறந்த கிறிஸ்தவனாகவும் வாழ வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார்.

உள்ளது ஒரே மதம், அது அன்பு மதம் தான்.

மட்டக்களப்பு சாயி சமிதியின் செயற்பாடுகளென்ன என்பதைக் கூற முடியுமா?

கல்விச் செயற்பாடுகள்
ஆத்மீகச் செயற்பாடுகள்
சேவைச்செயற்பாடுகள்
இளைஞர் அணி செயற்பாடுகள்
மகளிர் செயற்பாடுகள்

மேற்கூறிய செயற்பாடுகளின் கீழ் பல சேவைகளும் நாராயண சேவையும், பஜனையும் ஒழுங்காக சிறப்பாக நடத்தப்படுகின்றன.

மட்டக்களப்பு சத்திய சத்ய சாயி சமித்தி தவிசாளர்
க.இரத்தினராஜி சந்நிதி வாசகர்களுக்கு அளித்த பேட்டி
நேர்காணல் - மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றச் செயலாளர்
திருமதி கலா மகேந்திரராஜா

ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ

# ௐ கரையான் புற்றில் முனிவர் ௐ

ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ

பல ஆயிரம் வருடங்களுக்கு முன் கொடுமைமிக்க வழிப்பறிக் கொள்ளைக்காரன் ஒருவன் இருந்தான். போவார் வருவார்களை எல்லாம் இம்சித்துக் கொள்ளை அடித்தான். சப்தரிஷிகள் ஒருமுறை அவன் இருந்த காட்டு வழியால் வந்தார்கள். உயிரின் மேல் பற்று இருந்தால் உங்கள் உடமைகள் யாவற்றையும் என்னிடம் கொடுங்கள் – என்று அதட்டினான் கொள்ளைக்காரன்.

நாங்கள் சந்நியாசிகள். எங்களிடம் எதுவுமில்லை. ஆனால் நீ ஏன் இந்தப் பாவச் செயலில் ஈடுபடுகிறாய்? என்று கேட்டார்கள். அது என் தொழில். மனைவி, பிள்ளைகள் சுகமாக வாழ நான் செய்யும் தொழிழ் இது – என்றான் கொள்ளைக்காரன்.

அதனால் ஏற்படும் பாவத்தில் பங்கேற்பார்களா உன் மனைவி பிள்ளைகள்?

நிச்சயமாக – என்று விட்டு ஏளனமாக சிரித்தான் கொள்ளைக்காரன்.

கேட்டுச் சொல் – என்றார்கள் முனிவர்கள்


இங்கேயே நில்லுங்கள்.எங்கேயும் செல்லாதீர்கள் – என்று விட்டு ஓட்டமும் நடையுமாக வீடு நோக்கி சென்றான்

நான் செய்யும் காரியம் பாவமாம் . அதற்கு தண்டனை கிடைக்குமாம். அப்படி கிடைத்தால் அதில் நீயும் பங்கு கொள்வாய் அல்லவா என் ப்ராண நாயகியே?

மனைவி சிரித்தாள். எங்களுக்கு உடை, உணவு, வீடு, வாசல் ஏற்படுத்திக் கொடுப்பது உங்கள் கடமை. அவ்வாறு அமைத்துக் கொடுக்கும் போது நீங்கள் பாவம் செய்தால் அதற்கு நாங்கள் எப்படி பொறுப்பாளிகளாக முடியும் ? நாங்கள் ஏன் அந்தப் பாவத்தைப் பங்கு போட வேண்டும்? முடியாது! – என்றாள் மனைவி. குழந்தைகளும் அவ்வாறே கூறினார்கள். மனம் உடைபட்ட கொள்ளைக்காரன் கெஞ்சிப் பார்த்தான்.அசையவில்லை மனைவி, பிள்ளைகள்.

இந்தக் காலத்தில் என்றாலும் அரசாங்க காரியாலயங்களில் சம்பளத்தோடு கிம்பளம் வாங்கும் அலுவலர்கள் கூட தம் மனைவி, மக்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தால் பயப்படாதீர்கள, உங்கள் கிம்பளப் பணத்தை வைத்து ஓரு நல்ல வழக்குரைஞரை அமர்த்தி உங்களை பிணையில் கொண்டு வந்து விடுவோம். அதன் பின்னர் சாட்சிகளை விலைக்கு வாங்கி விடுவோம் என்று கூறியிருப்பார்கள். ஆனால் அந்த மனைவியும் பிள்ளைகளுமோஅப்படியல்ல.

நீ செய்யும் தொழிலில் வரும் தீமைகள் உன்னையே சாரும். கொணடு வரும் பொருட்களை எடுப்போம். ஆனால் பாவத்தில் பங்கு ஏற்க மாட்டோம் – என்று திட்டவட்டமாக கூறி விட்டார்கள்.திரும்பி ஓடினான் கொள்ளைக்காரன்.



நீதியரசர்
சி. விக்னேஸ்வரன்

நான் தோற்றுவிட்டேன்.முனிபுங்கவர்களே! என் பாவத்தில் பங்கு போட மாட்டேன் என்கிறார்கள் என் மனைவி, பிள்ளைகள். என்னால் சகல சௌகரியங்களையும் பெற்ற என் மனைவி, மக்கள், இப்படி என்னைக் கைவிட்டுவிட்டார்களே எனக்கு விமோசனம் கிடையாதா? அழுது கெஞ்சினான் கொள்ளைக்காரன்

இருக்கிறது உனக்கு பாவவிமோசனம்.அதோ ஒரு மரம் இருக்கிறது அல்லவா, அதை மரா, மரா, என்று

விழித்துக் சொல்லிக் கொண்டிரு. அது ராம, ராம, என்றாகும். அது ஒரு தெய்வீக மந்திரம். சகல பாவங்களையும் போக்கும் மந்திரம். நாங்கள் போய்வர மாதக் கணக்காகும். தொடர்ந்து இந்த திவ்ய நாமத்தை உச்சரித்துக் கொண்டேயிருக்க வேண்டும் – என்று கூறி முனிவர்களும் சென்று விட்டார்கள்.

நிலத்தில் இருந்து கொண்டான் கொள்ளைக்காரன். மரா, மரா, மரா என்று தொடங்கிய அவன் வாயில் இருந்து ராம, ராம, ராம என்ற ஒரு நாதமே வெளி வந்து கொண்டிருந்தது. ஊண், உறக்கம் இல்லை, ஓய்வில்லை. ராம நாமமே அவனின் சதா ஜெபிப்பதாக இருந்தது. மழைக்காலம் வந்தது. ஆடாமல் அசையாமல் வீற்றிருந்த கொள்ளைக்காரனைச் சுற்றி கறையான்கள் புற்றெடுத்தன. அவனை முற்றிலும் மூடி விட்டது கறையான் புற்று. இராம, இராம, இராம என்ற நாமம் மட்டும் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது புற்றினுள் இருந்து. ஏழு முனிவர்களும் திரும்பி வந்தார்கள், ஏழு மாதங்களின் பின். ஏழு வருடங்கள் கழித்து என்று கூறுவாரும் உளர்.

அலாதியான ஒளியொன்று பிரகாசித்துக் கொண்டிருந்தது கறையான் புற்றினுள் இருந்து. அது தான் பிரம்ம தேஜஸ். கொள்ளைக்காரன் பாரோர் வியக்கும் தெய்வீக ஞானி ஆகி விட்டான். கறையான் புற்றில் இருந்து வெளிவந்தபடியால் அவன் வால்மீகி என்ற பெயரைப் பெற்றான். வால்மீகம் என்றால் வடமொழியில் கறையான் புற்று.

இராமயணத்தை முதலில் எழுதியவர் இவர். இராமபிரானின் சமகாலத்தவர். இராமசரிதை இவ்வாறு தான் அமையும் என்ற செய்தியை முன்கூட்டியே அறிந்திருந்த முக்காலமும் உணர்ந்த ஞானசீலர். இராமரால் காட்டுக்கு அனுப்பப்பட்ட சீதாப்பிராட்டியையும் அவருக்குப் பிறந்த லவ, குச என்ற இரட்டைக் குழந்தைகளையும் பாதுகாத்த பரமஞானி. இராம நாமத்தின் பெருமையை உலகறியச் செய்தவர்.

# சந்நிதி சோதிடம்



அன்புக்குரிய வாசகர்களே!

ஒன்பதாண்டு காலம் ரிஷி கேசத்தில் வாழ்ந்து யோக வாழ்க்கையில் ஈடுபட்டவரும், "விக்னேஸ்;" என்ற பெயரில் பிரபல்யமடைந்துள்ள சோதிட ஆய்வாளரும; "வான்மதி" சோதிட சஞ்சிகை ஆசிரியருமான திரு விக்னேஸ்வரன் அவர்கள்சந்நிதி வாசகர்களின் சோதிடம் தொடர்பான சந்தேகங்களுக்கு அல்லது பிரச்சனைகளுக்கு விளக்கம் அளிக்க முன் வந்துள்ளார்.

சந்நிதி அன்னாருக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

வாசகர்கள் தமது பிரச்சினையைச் சுருக்கமாக ஒரு தாளில் தெளிவாக எழுதி, பின்வரும் கூப்பனை நிரப்பி, சுய விலாசமும், முத்திரையும் இடப்பட்ட கடித உறையுடன் எமக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர்
"சந்நிதி"
39, 36வது ஒழுங்கை
கொழும்பு – 06

சந்நிதி சோதிடம்

ஆசிரியர்
"சந்நிதி"
முழுப்பெயர்:.................................................
பிறந்ததிகதி:......................நேரம்:......................
விலாசம்:.........................................................
.........................................................................
இத்துடன் இணைத்துள்ள எனது பிரச்சனைக்கு சோதிட ஆய்வாளர் "விக்னேஸ்" அவர்களின் பதிலை எதிர்பார்க்கிறேன்.
திகதி ..........................
..............................
கையொப்பம்

# நான் கண்ட யோகர் சுவாமி

1927 ம் ஆண்டு. எனது இருபத்தேழாவது வயதில் எனது முதல் விவாகம் நடந்தது. இல்லற வாழ்க்கை முறையாக ஒரு மூன்று ஆண்டுகள் தான் நடந்திருக்கும்.

விதியை, வெல்ல யாரால் முடியும், எனது வாழ்க்கைத் துணைக்குச் சுவாசப்பையில் ஒரு கட்டு ஏற்பட்டதன் விளைவாக, மாறி மாறி வீட்டிலும் வைத்திய சாலையிலுமாகப் பல ஆண்டு மருந்து கொடுக்க வேண்டியதாயிற்று. அதனால் நான் கொழும்பிலிருந்து யாழ்பாணத்திற்கு அடிக்கடி வர நேர்ந்தது. அப்போதெல்லாம், கொழும்புத்துறைக்குச் சென்று யோகசுவாமிகளைத் தரிசிப்பதில் தவறுதில்லை. அவர் போதித்த வாக்கியமாகிய

அது எப்பவோ முடிந்த காரியம் என்பது என் மனதில் ஊன்றிப் பதிந்திருந்தமையால், என் மனைவியின் நோயைக் குறித்து நான் அதிகம் கவலைப்படவில்லை. சுவாமிகளுக்கும் அதைப்பற்றி ஒருபோதும் சொன்னதுமில்லை.

யோக சுவாமிகளை நான் அறிந்துகொண்ட நாள் முதல் அவரின் மறைவு வரைக்கும், எத்தனையோ தடவை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஒருபோதும் என் கவலைகளையோ, குறைகளையோ, மனதில் தானும் கேட்க வேண்டுமென்ற எண்ணமோ ஆசையோ எழவுமில்லை. கவலைகள் தலைக்காட்டும் போதெல்லாம், அது அப்படித்தான அது எப்பவோ முடிந்த காரியம் என்ற சுலோகங்களை நினைவு கூர்ந்து நெஞ்சைத் தேற்றிக் கொள்ள முடிந்தது.

யோக சுவாமிகளைத் தரிசிப்பதாலும் அவர்களின் திருவாய் மொழிகளைக் கேட்பதாலும், உண்டாகும் மனச்சாந்தியையும் இன்பத்தையும் பெறுவதை நாடியே நான் அவரிடம் செல்வதேயன்றி, வேறு நோக்கங்கள் சிறிதேனும் இருந்ததில்லை. அந் நாட்களில் சுவாமி பல பொது விஷயங்களைப் பற்றி எல்லோருடனும் சம்பாஷிக்கின்றதுண்டு. அவ்வேளைகளில் அவர் கேட்பதற்கு விடையாக ஏதும் சொல்வதேயன்றி நானாகவே உலக விஷயங்களைக் குறித்து யாதும் அவரோடு பேசியதில்லை.

ஒரு நாள், யாழ்பாணத்தில் நான் இருந்த பொழுது, கொழும்புத்துறைக்குப் போனேன். சுவாமி தன் ஆச்சிரமத்துப் படலைக்கு வெளியே நின்றார். நான் சென்ற காரைக் கண்டதும்:


நான் உன்னைத் தானே பார்த்துக்கொண்டு நின்றேன், வா உதாலை போவோம் என்று சொல்லிக் கொண்டு காரில் ஏறினார், யாதும் பேசாது அவர் காட்டிய வழி வழியே காரை ஓட்டினேன்.

சுவாமி: மனுஷிக்கு இப்போது எப்படிச் சுகம் என்றார்.

இருந்தபடியேதானிருக்கு, சுவாமி சுகமாகிறதென்று சொல்வதற்கு இல்லை என்று அமைதியாகப் பதிலளித்தேன். அதைப்பற்றி உனக்குக் கவலையா? தொடக்கத்தில் ஒரு மாதிரிதானிருந்தது. சுவாமி: ஆனால் இப்போ நான் அவ்வளவு கவலைப்படுவதில்லை

அப்படிச் சொல்லாதே. துக்கமிருக்க வேண்டும். துக்கம்தான் மனிதனின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. துன்பம் வளர்ச்சியைத் தருவது. அதனாலேதான் மகான்கள் துன்பத்தை வரவழை. என்றார்கள

நான் சுவாமியின் அமிர்த வார்த்தைகளை உற்றுக் கேட்டுக் கொண்டேனேயல்லாமல் மறு வார்த்தை பேசவில்லை. கார் வெகுதூரம் போய்விட்டது. அளவெட்டிக்கூடாகப் போகும் பொழுது நிப்பாட்டு என்றார். ஓரன்பர் வீட்டுப் படலைக்கு முன் காரில்



மு.வைரமுத்து

இருந்தபடியே வீட்டுக்குரியவரின் பேரைச் சொல்லிக் கூப்பிட்டார்.
அது கேட்ட அன்பர் படலைக்குச் சமீபமாக ஓடி வந்து சேருமுன்" இருக்கிறாயோ என்று பார்த்தனான்
ஆ.சரி. நான் வைரமுத்துவோடு சிறு சுற்றுப்போகின்றேன் என்றார்

கார் சென்றது .சுவாமி காட்டிய வழியே போகக் கட்டுடை வந்தது. இங்கினை தானே உன் மனைவியின் வீடு? என்று கேட்டார் சுவாமி. ஓம். சுவாமி கிட்டத்தான் என்றேன்.

வீட்டடியில் நிற்பாட்டு.! வீடுவந்ததும் நிற்பாட்டினேன். இருவரும் இறங்கி உள்ளே போனோம். சுவாமி வெளி விறாந்தையில், ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். வீட்டினுல் புகுந்தேன் நான்.

நோயாளிக்குக் கடும் சுரம். எழுந்த வந்து சுவாமிகளைத் தரிசிக்க முடியாத நிலை, எனது மைத்துனிகள் இருவரும் சுவாமியின் முன் சென்று தரையில் படிந்து பணிந்தார்கள். அவர்களைப் பார்த்து சுவாமி சில புத்திமதிகள் சொல்லத் தொடங்கினார்.

'குடியிருக்கும் வீடும் ஒரு கோவில் தான். அதைப் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும். அடிக்கடி தூசு போக்கிக், கூட்டிக் கழுவி, புனிதப் படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் மாத்திரமல்ல இங்கேயிருப்பது உங்களுடன் கூடக் கடவுளும் இங்கிருக்கிறார் என்னபதை மறந்து விடக் கூடாது சமயலறையை மிகமிகத் துப்பரவாக வைத்துக் கொள்ளுங்கள். சமையல் தொடங்குமுன் , கால்முகங்கழுவி வீபூதியணிந்து கொண்டு. அக்னியை மூட்டியவுடன் அக்கினி பகவானைக் கைகூப்பி வழிபட்டு, யாகம் செய்கின்றோமென மனதில் நினைத்துக் கொண்டு பயபக்தியோடு சமையல் செய்ய வேண்டும்.

என்றபடியே சுவாமி பேசிக்கொண்டிருக்கும் போது என் மாமனார். பின் விறாந்தையில் யாருடனேயோ உரத்துச் சத்தம் போட்டுப் பேசிக்கொண்டிருந்தது எனக்குப் பரபரப்பைத் தந்தது. உடனே நான் உட்சென்று,ஒரு பெரியவர் வந்திருக்கிறார் தயவு செய்து மெல்லப் பேசுங்கள் என்று புத்தி கூறிவிட்டு வந்ததைச் சுவாமி கவனித்திருக்க வேண்டும். ஏனெனில், நாமிருவரும் திரும்பக் காருக்கு வந்தபோது:
யாரங்கே உரத்துக் கதைத்தது? என்றார் சுவாமி.

அது என் மாமனார். அவர் ஒரு மாதிரியானவர். கோயில், குலம் தெய்வம் என்னும் நம்பிக்கை அதிகமில்லாதவர் என்று மெல்லத் தயக்கத்தோடு விடையளித்தேன்.

என்ன ! ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? இந்தப் பிரபஞ்சம் இறைவனின் மார்பில் ஒரு தங்கப்பதக்கம். அதில் பதிக்கப்பட்ட இரத்தினக் கற்கள் தான் உயிர்கள். அந்தக் கற்கள் எல்லாம் ஒரே வெள்ளை நிறமாகவிருப்பின் புத்தகம் அழகாயிராது என்றெண்ணி இறைவன் இடையிடையே, நீலம், பச்சை, கறுப்புக்கற்களையும், பதித்திருக்கின்றான் அதனாற்றானே நாம் வாழுமிவ்வுலகம் இவ்வளவு அற்புதமாயியும் அழகாயுமிருக்கு. அதைக் குறை கூறலாமா?

. சரிதான் சுவாமி என் அறியாமையினால் குறைவாகக் கூறிவிட்டேன் என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன் நான்.

வீடு திரும்பியபோது அங்கு உள்ளவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் ஆரவாரப்படுவதைக் கண்டேன். பல நாட்களாக மனைவியைப் பீடித்திருந்த கடும்சுரம் படிப்படியாக இறங்கி இயல்பான வெப்பநிலைக்கு வந்து விட்டதாகவும், அங்கு வந்திருந்தது. யாரென விசாரித்ததாகவும், அதிசயத்துடன் அறிவித்தார்கள். எனக்கு அஃது அதிசயமாயிருக்கவில்லை. சுவாமி காரில் வரும் பொழுது என்னுடன் பேசிக்கொண்ட விஷயங்களும், வீட்டடியில் காரை நிறுத்திச் சென்றமையும் எதற்காக இந்த பயணத்தை மேற் கொண்டாரென்பது. எனக்கு விளங்கியது.

ஒரு தவ சிரேஷ்டர் ஓர் இல்லத்திற்குத் தாமாகவே எழுந்தருளினால் ஏதோ ஒருபயன் இல்லாதிருக்குமா?

# ஷீர்டீ பாபாவின் கருணை



1910 ம் ஆண்டில் தீபாவளி விடுமுறையின்போது, பாபா அமர்ந்து குளிர்காய்ந்து கொண்டிருந்தார். பிரகாசமாக எரிந்து கொண்டிருந்த துனியில் விறகை நுழைத்தார். சிறிது நேரத்திற் குப்பியின் விறகுகளை நுழைப்பதற்குப் பதில் ,பாபா தமது கரத்தையே தூனி உள்ளே நுழைத்துவிட்டார். கரம் உடனே கருகி வெந்துவிட்டது. இது வேலையாள் மாதவ் வாலும் மாதவ்ராவ் தேஷ்பாண்டேயாலும் உடனே கவனிக்கப்பட்டது. உடனே அவர்கள் பாபாவிடம் ஓடினார்கள். மாதவ்ராவ் தனது கைகளை பாபாவின் இடுப்பில் கொடுத்துச் சேர்த்து, வலிந்து பின்னால் இழுத்தார், தேவா, எதற்காக இங்ஙனம் செய்தீர்? என்று கேட்டார். பின்னர் பாபா தம் உணர்வுக்கு வந்து பதில் அளித்தார்:

தொலை தூரத்தில் உள்ள ஏதோ ஓர் இடத்தில் லுள்ள ஒரு கொல்லனின் மனைவி உலைக்களத்தில் உள்ள துருத்தியில் வேலை செய்துகொண்டு இருந்தாள். அப்போது அவளது கணவன் அவளைக் கூப்பிட்டான். அவள் தனது இடுப்பில் குழந்தை இருபப்தை மறந்து அவசரமாக ஓடினாள், அதனால் உலைக்களத்தில் குழந்தை நழுவி விழுந்துவிட்டது. நான் உடனே உலைக்களத்தில் கைவிட்டு குழந்தையைக் காப்பாற்றினேன். எனது கரங்கள் வெந்து போனதைப் பற்றி நான் பொருட்படுத்தவில்லை. குழந்யையின் உயிர் காக்கப்பட்டதை எண்ணி நான் மகிழ்வடைகிறேன் — ஷீர்டி பாபா விளக்கினார்.

இரண்டு பல்லிகள்

ஒரு முறை பாபா மசூதியில் அமர்ந்திருந்தார். ஒரு பக்தரும் அவர் முன்னர் அமர்ந்திருந்தார். ஒரு பல்லி டிக்டிக் துடிப்பை விளைவித்தது. ஆச்சரியத்தால் உந்தப்பட்ட அவர் பல்லியின் இத்துடிப்பு ஏதேனும் பின் விளைவு காட்டுதல் குறித்தா? அது நல்ல அடையாளமா என்றும் பாபா கூறினார். பாபா சொல்லுவதன் அர்த்தம் புரியாமல் அவர் மௌனமாய் அமர்ந்து இருந்தார்.

உடனேயே ஔரங்கா பாத்திலிருந்து குதிரையில் ஒரு பெருந்தகை பாபாவைப் பார்க்க வந்தார். ஆனால் அவரது குதிரை பசியாய் இருந்த படியால், நகர்வதாக இல்லை. அதற்குக் கொள்ளு தேவைப்பட்டது. கொள்ளு கொண்டுவருவதற்காகத் தனது தோளில் இருந்து ஒரு பையை எடுத்தார். தூசியைப் போக்குவதற்காகத் தரையில் அடித்தார். அதிலிருந்து ஒரு பல்லி விழுந்தது. எல்லோர் முன்னிலையிலும் அது சுவரில் ஏறியது. கேள்விகேட்ட பக்தரிடம் அப்பல்லியை நன்றாகக் கவனிக்கும்படி பாபா கூறினார். அது உடனே தனது பெருமையான நடையுடன் தன் சகோதரியை நோக்கிச் சென்றது. நீண்டகாலத்திற்குப் பின்னர் இரண்டும் சந்தித்தன. ஒன்றையொன்று முத்தம் கொடுத்துக் கட்டியணைத்துக் கொண்டன. சுற்றிச்சுற்றி ஓடிவந்து அன்பால் நடனம் ஆடின. ஷீர்டி எங்கே இருக்கிறது? ஔரகாபத் எங்கே இருக்கிறது? இரண்டு சகோதரிகள் சந்திக்கப் போவதை எங்ஙனம் பாபா முன்னாலேயே தீர்க்க தரிசனம் செய்தார். இவையெல்லாம் உண்மையிலேயே மிகவும் ஆச்சரியமானவைதான். பாபாவின் எங்குநிறை பேரறிவையும், அனைத்தையும் உணரும் ஆற்றலையும் மெய்ப்பிக்கிறது.

### தண்ணீரை எண்ணெய் ஆக்குதல்

சாயிபாபாவுக்கு விளக்குகள் என்றால் அதிக விருப்பம். அவர் கடைக்காரர்களிடமிருந்து எண்ணெய் வாங்கி மசூதியிலும் கோயிலிலும் இரவு முழுவதும் விளக்குகளை எரிய விடுவது வழக்கம். இது சில நாட்கள் நடந்துவந்தது. பின்பு எண்ணெயை இலவசமாக அளித்துவந்த வணிகர்கள் எல்லோரும் ஒன்று கூடி, இனிமேல் எண்ணெய் கொடுப்பதில்லை என முடிவு செய்தனர். வழக்கம்போல பாபா அவர்களிடம் எண்ணெய் கேட்கப்போன போது அவர்கள் எல்லோரும் தீர்மானமாக எண்ணெய் இல்லை எனச் சொல்லிவிட்டார்கள்.

இதைக்கேட்டு குழப்பமடையாத பாபா மசூதிக்குத் திரும்பி வந்து காய்ந்த திரிகளை விளக்குகளில் இட்டார். வணிகர்கள் மசூதிக்கு வந்து என்ன நடக்கிறது என்பதை ஆச்சர்யத்துடன் கவனித்துக் கொண்டிருந்தனர். பாபா மிகக்கொஞ்சம் (சில துளிகள்) மட்டுமே எண்ணெய் இருந்த தகரக்குவளையை எடுத்தார். தண்ணீரை அதில் ஊற்றிக் குடித்தார். இவ்விதமாக அதை நிவேதனம் செய்த பிறகு தகரடப்பாவில் தண்ணீர் மறுபடியும் எடுத்து எல்லா விளக்குகளிலும் அதால் நிரப்பிக் கொளுத்தினார். வணிகர்களுக்கு ஆச்சர்யத்தையும் பயத்தையும் விளைக்கும் படியாக விளக்குகள் எரியத்தொடங்கின. இரவு முழுதும் எரிந்துகொண்டிருந்தன. வணிகர்கள் தங்கள் செய்கைக்கு மனம் வருந்தி பாபாவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர் பாபா அவர்களை மன்னித்து எதிர்காலத்தில் அதிக உண்மையுள்ளவர்களாக இருக்கும்படிக் கேட்டுக்கொண்டார்.

### இரண்டு ஆடுகள்

ஒரு முறை லெண்டிலிருந்து பாபா திரும்பி வந்துக்கொண்டிருக்கும் போது ஆட்டு மந்தையொன்றைக் கண்டார். அவைகளில் இரண்டு அவரின் கவனத்தைக் கவர்ந்தன. அவைகளிடம் சென்று அவற்றைத் தடவிக்கொடுத்து அன்பு செலுத்தி அவைகளை ரூபாய் 32 க்கு விலைக்கு வாங்கினார். பாபாவின் இந்தச் செயலைக் கண்டு பக்தர்கள் ஆச்சரியப்பட்டனர். இவ்வியாபாரத்தில் பாபா ஏமாற்றப்பட்டார் எனவும், ஒரு ஆடு இரண்டு ரூபாவீதம் அல்லது அதிகபட்சம் ரூ.3 அல்லது 4 ரூபாய்வீதம் அல்லது அதிகபட்சம் ரூ8 மட்டுமே பெறும் எனவும் அவர்கள் நினைத்தனர். அவர்கள் இதற்காக பாபாவை கடிந்துகொண்டார்கள். ஆனால் பாபா அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தார். பக்தர்கள் அதற்கு விளக்கம் கேட்டனர். தமக்கென வீடும் கவனிக்க குடும்பமும் இல்லாதபடியால் தாம் பணத்தை சேமிக்கக் கூடாது என்று அவர் கூறினார். தமது செலவில் நான்கு சேர் பருப்பு வாங்கி ஆடுகளுக்கு அளிக்கும்படி கூறினார். இது முடிந்த பின், பாபா ஆடுகளை, மந்தையின் சொந்தக்காரர்களுக்கு கொடுத்து விட்டு . ஆடுகளைப்பற்றிய கீழ்க் கண்ட கதையையும் கூறினார்.

"ஓ" ஷாமா, தாத்யா, இவ்வியாபாரத்தில் நான் ஏமாற்றப்பட்டு விட்டேன் என நீங்கள் நினைக்கிறீர்கள், கிடையாது. அவைகளின் கதையைக் கேளுங்கள். அவைகளின் முந்தைய பிறவிகளில் மனிதர்களாய் இருந்தனர். எனது நண்பர்களாய் இருந்து, எனது அருகில் அமரும் நல்ல அதிர்ஷ்டம் பெற்றிருந்தனர். அவர்கள் ஒரு தாய் மக்கள். முதலில் ஒருவரையொருவர் நேசித்தனர். ஆனால் பிற்காலத்தில் பகையாளிகளாய் ஆகி விட்டனர். மூத்தவன் சோம்பேறி, பின்னவன் சுறுசுறுப்பான பையன், பெரும் பொருள் திரட்டினான். மூத்தவன் பேராசையும் பொறாமையும் கொண்டு பின்னவனைக் கொன்று பணத்தை எடுத்துக்கொள்ள விரும்பினான். தங்கள் சகோதர உறவை மறந்து, ஒருவருடன் ஒருவர் சண்டை போடத் தொடங்கினர்.

மூத்தவன் இளையவனைக் கொல்ல பல வழிமுறைகளைக் கையாண்டு அவனது பல முயற்சிகளில் தோல்வியடைந்தான். இவ்வாறாக அவர்கள் மரண விரோதியானார்கள். முடிவாக ஒரு சந்தர்ப்பத்தில் மூத்தவன், இளையவன் தலையில் தடிக்கம்பால் பலத்த மரண அடி ஒன்று கொடுக்க இளையவன் மூத்தவனை கோடாரியால் தாக்க இதன் விளைவாக இருவரும் அவ்விடத்திலேயே மாண்டனர். அவர்கள் வினையின் காரணமாக இருவரும்

# இதோ



கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் நடாத்திய அறநெறிப் பாடசாலை விழாவில் புனித பீட்டர் கல்லூரி மாணவன் செல்வன் கிரிஷான் இராஜரட்ணம் கிருஷ்ணராகத் தோன்றும் அற்புதக் காட்சி

ஆடுகளாகப் பிறந்தனர். அவர்கள் என்னைக் கடந்து சென்ற போது , நான் அவர்களை அறிந்து கொண்டேன். அவைகளின் முந்தைய பிறவிகளை நினைவு கூர்ந்து அவர்கள் மேல், இரக்கம் கொண்டு அவைகளுக்கு இளைப்பாறுதலும் சௌகரியமும் தர விரும்பி நான் என்னிடம் இருந்த எல்லாப் பணத்தையும் செலவழித்தேன். இதற்காகத்தான் நீங்கள் என்னைக் குறை கூறுகிறீர்கள். நீங்கள் என்னுடைய பேரத்தை விரும்பாததால் நான் அவைகளை மேய்ப்பனிடம் திரும்ப அனுப்பிவிட்டேன;'' என்றார். ஆடுகளிடம் சாயியின் அன்பு அத்தகையது.

# மகா சிவராத்திரி

மகா சிவராத்திரி விரதம் ஆண்டு தோறும் மாசி மாதத்தில் வரும் அபரபக்கச் சதுர்த்தசி தின இரவு தான் சிவராத்திரியாகும்.

சிவராத்திரி நாளன்று பகல் முழுவதும் உணவு கொள்ளாது, இரவு முழுவதும் துயில் கொள்ளாது இவ்விரதம் அநுட்டிக்கப்படவேண்டியதாகும். ஆனால் உணவும் துயிலும்ஒழித்தால் மட்டும் போதாது. அன்று பகல், இரவு முழுவதும் சிவத்தியானத்திலேயே பொழுது கழிய வேண்டும். துயிலை ஒழித்து அவப் பொழுதாகக் கழித்தல் குளிப்பதற்கென்று போய்ச் சேறு பூசுவது ஒக்கும். ஆகவே அன்று முழுவதும் சிவ வழிபாட்டிலே மனதைப் புகுத்தி சிவத்திருமுறைகளை ஓதி சிவ புராணங்களைப் படித்து வழிபாடு செய்து நற்பயன் பெறுதல் வேண்டும்.

திருமால், பிரமன் இருவரும் தமக்குள் யார் பெரியவர் எனப் போட்டியிட்டனர். அவர்களது போட்டியைத் தடுக்க இறைவன் அவர்கள் இருவருக்கும் இடையில் சோதிவடிவாகத் தோன்றினார். அச்சோதியின் அடியை அன்றி முடியைக் காணும் படி அசரீரியாகப் பணித்தார். அடியை அன்றி முடியை யார் காண்பாரோ அவரே பெரியவர் எனவும் பணித்தார்.

சோதியுள் கேட்ட அசரீரியின்படி பிரமா முடி தேடப் புறப்பட்டார். விஷ்ணு அடி தேடப் புறப்பட்டார். பிரம்மா அன்னப் பறவை உருவோடு புறப்பட்டான். விஷ்ணு பன்றி உருவாக அடி தேடச் சென்றார். ஆனால் இருவரும் அடியும் காணவில்லை முடியும் காணவில்லை. இறைவன் மாலும் அயனும் காண மாட்டாதவர். அவர் சோதி வடிவாக மால் அயன்இருவருக்கும் இடையில் தோன்றிய தினமே மகா சிவராத்திரி தினமாகும். இத்தினத்தை நாம் விசேட விரத தினமாகக் கொண்டு சிவனை வழிபட்டு நற்பயன் அடைவோம்.

சிவகுமார் – அபிராமி
ஆண்டு 4பி
இராமநாதன் மகளிர் கல்லூரி
பம்பலப்பிட்டி

# விநோத பறவை



சுவாமிஜி சொன்ன கதை

ஒரு தேசத்தில் தர்மம் குன்றி அதர்மம் பெருகிக் கொண்டிருந்த சமயத்தில் தர்மப் பிரகாசத்திற்காக் " தர்மங்கரோத பறவைகள்" என்ற பேரில் ஒரு பறவைக் கூட்டம் அங்கு வந்து சேர்ந்தது.அப்பறவைகள் மக்கள் போற்றும் வண்ணம் தர்மப் பிரசாரம் செய்து வந்தன.

அந்த நாடு பசு சம்ரட்சணையில் பேர் பெற்ற நாடு. காலப் போக்கில் அங்கு வளர்க்கப்படும் பசுக்களுடைய கண்கள் இராக்காலங்களில் களவு போய்க் கொண்டிருந்தன. ஊர் மக்கள் இதனைக் கண்டு பிடிக்க முடியாமையால் மன்னரிடம் முறையிட்டனர்.

இதன் காரணத்தைக் கண்டறிவதற்கு மன்னன் தனது அதிகாரிகளைப் பணித்தார். சில நாட்களின் பின்னர் அதிகாரிகள் மன்னனிடம் வந்து காரணத்தை அறிவித்தனர். "தர்மம் கரோது பஹீ பக்ஷீணாம் இராத்திரௌகோ நேத்திரௌஹரீணம்" என்பது தான் காரணம் என்றனர்.

"பகல் முழுவதும் தர்மப் பிரசாரம் செய்து வரும் பறவைகளே இராக்காலத்தில் பசுக்களின் கண்களைக் களவெடுத்து வருகின்றன. அவைகளுக்கு பசுக் கண்களே உணவு. வேறொன்றும் உண்பதில்லை" என்று சொல்லி முடித்தார்கள்

இந்தப் பறவைகளின் கதை போன்றது தான் இன்றைய உலகப் போக்கு.

இன்னும் இதேநிலையில் போய்க் கொண்டிருந்தால் பாரத யுத்தத்திற்குப் பின் கௌரவர் குலத்திற்கு நேர்ந்தது தான் நமது எதிர்கால சமுதாயத்திற்கு நேரலாம்.

ஆகையால் மனிதர்களைப் பேயராய்ப் பித்தராய் அலையவிடாமல் தடுத்தாட் கொண்டுவரும் சனாதன தர்மம் சிறப்புற வளருவதற்கு ஒவ்வொருவரும் தன் தன் கருமத்தை சுத்திகரிக்க வேண்டும்.

– ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா –

சுவாமி கெங்காதரானந்தா அவர்களின் எட்டாவது குருபூசையை ஒட்டி பல்வேறு நிகழ்வுகள் பெப்ரவரி 18ம் திகதி திருகோணமலை சிவயோக சமாஜத்திலும் கொழும்பிலும் சிறப்பாக நடைபெற்றன.


WITH BEST COMPLIMENTS

from

EVER GREEN'S

GENERAL MERCHANTS, DEALERS
IN GROCERIES & CAKE INGREDIENTS

198 A, GALLE ROAD
WELLAWATTE
COLOMBO - 06
PHONE: 586847, 582086

VAN FOR HIRE

அவன் பெயர் ரங்கன். கடவுள் பொம்மைகளை செய்து விற்று வருவது அவன் தொழில். அதனால் அவனை 'பொம்மை' ரங்கன் என்று எல்லோரும் அழைப்பார்கள். சிவன்கோயில் ஒன்றின் அருகில் உள்ள குடிசை ஒன்று 'பொம்மை' ரங்கனின் வசிப்பிடமாக இருக்கிறது.

ஒருநாள்.... குடிசைக்கணக்கெடுப்பு அதிகாரி ஒருவர் அக்குடிசைக்குச் செல்கிறார். பொம்மை ரங்கனின் விவரங்களைத் திரட்டுகிறார்.

பெயர் என்ன?

என் பெயர் பொம்மை ரங்கன்.

அப்பா பெயர் சாயிநாதன்.

அம்மா பெயர் என்ன?

அம்மா பெயர் சாயிமாதா.

உனது விலாசம் என்ன?

சாயிமந்திர், துவாரகவாயி, மகராஷ்டிரா – இதுதான் என் விலாசம்.

அதிகாரிக்குக் கோபம் வருகிறது.

"என்ன, எதனைக் கேட்டாலும் சாயி, சாயி என்றே பதிலளிக்கிறீர்?"

பொம்மை ரங்கன் பதிலளிக்கிறான். "எனக்குத் தெரிந்தது சாயி பாபா தான். என்னை அடித்தாலும் அம்மா என்று கத்த மாட்டேன். பாபா என்றுதான் சொல்லுவேன்."

அதிகாரி மீண்டும் கேட்கிறார். "எவ்வளவோ இடம் இருக்கிறது. இந்தக் குடிசையிலே ஏன் தங்கியிருக்கிறீர்?"

பொம்மை ரங்கன் கூறுகிறான், "உடம்பில் எவ்வளவோ இடம் இருக்கிறது. ஆனால், கண்கள் முகத்தில் மட்டும்தான் இருக்கின்றன. எது எது எங்கெங்கு இருக்க வேண்டும் என்று தீர்மானம் பண்ணுவது நாம் அல்லர். அவன்தான், அவனுக்குத் தான் அது தெரியும். "பொம்மை ரங்கனின் முகத்தில் ஒளி வீசுகிறது."

பாபா, பாபா என்று வாழும் பொம்மை ரங்கன் ஒருநாள் பொம்மைகளை விற்கச் செல்கிறான். வாயிலே – "ஜெயஜெய சாயிநாதா, ரகு ஜெயசாயிநாதா" என்ற பாடலுடன் தோளிலே தாவுதடியில் இரு பக்கங்களிலும் பொம்மைகளோடு வீதி வழியே சென்றுகொண்டிருக்கிறான். பொம்மைகளில் சீரடி சாயிபாபா பொம்மைகளும் உள்ளன. தவறி சீரடி சாயி பாபா பொம்மை ஒன்று வீதியில் விழுந்து விடுகிறது. ரங்கன் அதனை எடுக்கச் செல்கிறான். ஆனால், சீரடி சாயி பாபா பொம்மை தானாக நகர்ந்து கொண்டே செல்கிறது. ரங்கனுக்கு வியப்பு. பின் தொடர்கின்றான்.

# பொம்மை ரங்கன்

ஒரு பங்களாவின் வாசல் முன்பாக, பங்களாவைப் பார்த்தபடி சீரடி சாயி பாபா பொம்மை திரும்பி நிற்கிறது "புரிஞ்சுக்கிட்டேன் பாபா. இந்த பங்களாவில் ஏதோ ஒரு அசம்பாவிதம் நடக்கப்போகிறது. அதனைத் தடுப்பதற்கு திடசங்கற்பம் கொண்டு பங்களா முன்வந்து நிற்கிறாய் பாபா. உன்னை நான் பங்களாவில் சேர்த்து விடுகிறேன்." என்று பொம்மை ரங்கன் தனக்குள் கூறுகின்றான்.

பிரதாப் – லட்சுமி தம்பதிகள் அப்பங்களாவில் வாழ்கிறார்கள். ஒரே ஒரு மகன். வயது 10 இருக்கும். பெயர் ஜெயசூரியா.

மறுநாள் சீரடி சாயி பாபா பொம்மையை அந்த பங்களாவிற்குள் எடுத்துச் செல்கிறான் "பொம்மை" ரங்கன். குடும்பத் தலைவர் பிரதாப்பைச் சந்திக்கின்றான். பாபாவை உங்கள் வீட்டில் சேர்ப்பிக்க ஆணை கிடைத்துள்ளது என்று கூறி சீரடி பாபா பொம்மையைக் கொடுக்க முயற்சிக்கின்றான்.

> "சாமி, நம்பாதவனுக்கு இது பொம்மை,
> நம்பிறவனுக்கு இது பாபா"

"என்ன கிறுக்கு மாதிரிப் பேசுகிறாய்" – பிரதாப் கிண்டல் செய்கின்றான். குடும்பத்திற்கு நேரப் போகும் ஆபத்தை இந்த பொம்மையா தீர்க்கப்போகின்றது என்று பிரதாப் கூற, "சாமி, நம்பாதவனுக்கு இது பொம்மை, நம்பிறவனுக்கு இது

பாபா” என்று “பொம்மை” ரங்கன் பதிலளிக்கின்றான். சீரடி பாபா பொம்மையை அந்த பங்களாவில் சேர்ப்பித்துவிட ரங்கன் தொடர்ந்து முயற்சிக்கின்றான். ஒருநாள் தொல்லை தாங்க முடியாமல் அந்த பொம்மையை காசு கொடுத்து வாங்கி, ரங்கனின் கண் முன்னாலேயே தூக்கி எறிந்து விடுகின்றான் பிரதாப். ரங்கனுக்கு சரியான கவலை. வினாசகாலே விபரீத புத்தி என்று கூறிக் கொள்கின்றான் ரங்கன். இருந்தும் பிரதாப் வெளியில் போயிருந்த சமயம் பார்த்து, பிரதாபின் மகன் ஜெயசூரியாவிடம் சீரடி பாபாவின் பொம்மையை “பொம்மை” ரங்கன் ஒப்புவித்து விடுகிறான். “பொம்மை” ரங்கனுக்குத் திருப்தி. ஜெயசூரியாவுக்கு இனி ஆபத்தில்லை என்று நிம்மதியடைகின்றான்.

நீ ஓரடி எடுத்துவைத்தால் உன்னை நோக்கி நான் நூறு அடி எடுத்து வைப்பேன். இங்கிருக்கும் எல்லாவற்றிலும் நான் இருக்கின்றேன்”

என்றும் இளமையாக வாழ வேண்டும் என்று விரும்பும் துறவி, ஆவியுலகத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர விரும்பும் மந்திரவாதிப் பெண், தங்கப்புதையல் ஒன்றை அடைய விரும்பும் ஒருவர். இவர்கள் மூவரும் தாங்கள் விரும்பியதை அடைய வேண்டுமென்றால் நரபலி ஒன்றைக் கொடுக்க வேண்டும். நரபலியாகக் கொடுக்கப்படுபவர் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இவ்வுலகில் 7 ஆவது பிறப்பை எடுத்தவராக இருக்க வேண்டும். அவரின் வலது உள்ளங்கையில் சுவஸ்திகா சின்னம் இருக்க வேண்டும். இவ்வளவும் கொண்டவனாக அமைகிறான் பிரதாப் – லட்சுமி தம்பதிகளின் புதல்வன் ஜெயசூரியா.

துறவி பிரதாப்பைக் கொலை செய்துவிட்டு, பிரதாபின் உடலில் புகுந்துகொண்டு பிரதாப்பாக வந்து சேருகிறான். தங்கப் புதையலை எடுக்க விரும்புவனும் ஆவியுலகத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர விரும்பும் மந்திரவாதிப் பெண்ணும் பிரதாப்பின் பங்களாவை வந்தடைகின்றனர். பிரதாபின் உருவில் வந்த துறவி இக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கின்றான். பங்களாவில் பாபாவின் பொம்மையைக் கண்டவுடன் பிரதாப் பதறுகிறான். சீரடி பாபாப் பொம்மை வீட்டிலிருக்கும் வரை நான் பங்களாவில் தங்க மாட்டேன் என்று பிரதாப் கூற, மனைவி லட்சுமி பொம்மையைத் தூக்கி வெளியே எறிந்து விடுகிறாள். குழந்தை ஜெயசூரியாவிற்கு இருந்த பாதுகாப்புப் போய்விடுகிறது. மூவரும் குழந்தையைக் கொல்லத் திட்டம் தீட்டுகின்றனர். (இந்த நிலையில் பாபாவி இன்னொரு ஜெயசூரியாவாக பங்களாவிற்குள் வருகிறார். பங்களாவில் இரண்டு ஜெயசூரியாக்கள் உண்மையான ஜெயசூரியா யாரென்று அடையாளம் காண முடியாத நிலை ஏற்படுகிறது. ஜெயசூரியா காப்பாற்றப்படுகின்றான்.

அண்மையில் தமிழகத்தில் திரையிடப்பட்ட “மாயா” படத்தின் கதை இவ்வாறு அமைகிறது.

பாபா பக்தனாக, பொம்மைக்காரனாக எஸ்.பி.பாலசுப்பிரமணியம் நடிக்கவில்லை அப்பாத்திரமாகவே மாறி விடுகின்றார். பாபாவின் புகழ்பாடும் பாத்திரத்தை அவர் சிறப்புறச் செய்திருக்கின்றார்.

அந்த பங்களாவிற்குள் ஜெயசூரியாவைக் காப்பாற்ற இன்னொரு ஜெயசூரியாவாகச் செல்லும் குழந்தை பாபா, விளக்கு எரிக்க தண்ணீரைப் பயன்படுத்துகிறார். லட்சுமி அதனைப் பார்த்து என்ன! தண்ணீரில் விளக்கெரிகிறது. என அதிசயப்பட, “பக்தியோடு பாபாவை நினைத்தால் பாறையிலும் தேனூறும்” என்கிறார் புன்சிரிப்புடன். “நீ ஓரடி எடுத்துவைத்தால் உன்னை நோக்கி நான் நூறு அடி எடுத்து வைப்பேன். இங்கிருக்கும் எல்லாவற்றிலும் நான் இருக்கின்றேன்” இவ்வாறு இன்னொரு கட்டத்தில் குழந்தை பாபா கூறுகிறான்.

லட்சுமி, கணவனின் வற்புறுத்தலுக்குப் பணிந்து குழந்தை பாபாவை வெளியேறும்படி உத்தரவிட, குழந்தை பாபா வெளியேறி ‘பொம்மை’ ரங்கனின் குடிசைக்கு வருகிறார். ‘பொம்மை’ ரங்கன்

"கொட்டுகிறது தேள் குணம்.
திட்டுகிறது மனித குணம்,
மன்னிக்கிறது தெய்வத்தின்
குணம்"

குழந்தை பாபாவைப் பார்த்து "ஸ்ரீராமனாக வந்து காட்டுக்குப் போனாய். கிருஷ்ணராய் வந்து ஜெயிலுக்குப் போனாய். ஆஞ்சநேயராக வந்து வாலைச் சுட்டுப் பொசுக்கினாய். சிவனாய் வந்து பிச்சையெடுத்தாய். நல்லது பண்ண நீ அவதாரம் எடுக்கிறாய். ஆனால், நீ திருந்த மாட்டாய்! உனக்கு இன்னும் வேண்டும்" என்று வருந்துகிறான். அதற்கு குழந்தை பாபா, "கொட்டுகிறது தேள் குணம். திட்டுகிறது மனித குணம், மன்னிக்கிறது தெய்வத்தின் குணம;" என்று பதிலளிக்கிறார்.

பிரபல பின்னனிப் பாடகரான எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பாபாவின் புகழ்பாடும் ஒவ்வொரு காட்சியிலும் பார்ப்போரின் உள்ளங்களில் பக்தி உணர்வைப் பெருக்கெடுத்தோடச் செய்து விடுகிறார். பாட்டினால் மட்டுமல்ல, நடிப்பிலும் உயர்ந்து நிற்கிறார் 'பொம்மை' ரங்கனாக பாலசுப்பிரமணியம். 'சாயிநாதா, சாயிநாதா' என்று ஆரம்பிக்கும் பாடலில்

பாபா உன் கருணாலயம்
பாதம்தான் கமலாலயம்,
ஆனந்த கீதாலயம்,
அது எல்லோருக்கும் சரணாலயம்

என்ற அடிகளுடன் பாபாவின் பாதங்கள் காட்டப்படுகின்றன. மாயா, மனிதனின் மாயைகளைக் நீக்கும் திரைப்படம்.

தீபன்ராஜா


* தாலிக்கொடி
* மோதிரம்
* நெக்லஸ்
* காப்பு


தரத்திலும் ரகத்திலும் சிறந்த கண்ணையும்
கருத்தையும் கவரும்
வண்ண வண்ண டிசைன்களில்
தங்க நகைகள் குறைந்த விலையில்
ஒரு வாரத்திற்குள் செய்து கொடுக்கப்படும்.

தாலிக்கொடி ஓடர் செய்பவர்களுக்கு
இலவசமாக தாலிக்கு பொன்
உருக்கி கொடுக்கப்படும்.

அம்பிகா ஜுவலரி
42, காலி வீதி, தெகிவளை.
தொலைபேசி இல. 724758


## கோணேசப் பெருமான்

திருக்கோண மாமலையில் குடிகொண்ட
கோணேசப் பெருமானே வாழ்க!
அன்பு இரக்கம் ரசனை கொண்ட
முக்கண்ணனே வாழ்க!
நெருப்பை ஏந்தி விளையாடும்
நெற்றிக் கண்ணனே வாழ்க!
திருவிளை யாடல்கள் புரிந்த
ஓசைச் சொக்கரே வாழ்க!
நாக பாம்பின் நஞ்சை விழுங்கிய
நீல கண்டரே வாழ்க!
அன்பர் துன்பம் நீக்கும்
அன்புக் கடலே வாழ்க!
எம்பெருமானே! எனறென்றும்
வாழிய! வாழியவே!



வைஷ்ணவி சுதாஷங்கர்

# உயிர் இறை அனுபவம்

மனம் தானே எந்தப் பொருளையும் உணர முடியாது. அதற்கு என்று தனியே ஒளி இல்லை. உயிரின் ஒளியைக் கொண்டு தான் மனம் செயற்படுகிறது. மனம் உயிரால் அறியப்படும் பொருள். உயிர் ஒரு பொருளை அறிவதற்கு மனதைப் பயன்படுத்துகிறது. அதனால் மனதை உயிரின் ஒளி என்பார்கள் யோகிகள்.

உயிருக்குள் இறைவன் இருப்பதால் உயிர் தானே ஒளியுடன் விளங்குகிறது. இதை உள்ஒளி என்பார்கள் ஞான யோகிகள். உயிர் ஒரு பொருளை அனுபவிப்பதற்கு உடம்பும் மனமும் ஓரளவு உதவி செய்கின்றன. அதனால் இதை உலக அனுபவம் என்று சொல்லுவார்கள்.

மனதின் துணையும் உடம்பின் துணையும் இல்லாமல் உயிர் தானே ஒரு பொருளை உணரவும் அனுபவிக்கவும் முடியும். இது தான் உயிர் அனுபவம்.



சுவாமி சச்சிதானந்தா

இவற்றைக் கடந்து இறைவன் அருளாளேயே எந்தப் பொருளையும் அனுபவிக்க முடியும். இது தான் அருள் அனுபவம்.

அகங்காரத்தை முழுவதும் கடந்து மேலே செல்லுகிற போது உயிர் இறை அனுபவத்தை பெறுகிறது. ஒரு பொருளை அனுபவிக்கும் போது ஆணவத்தால் அதன் முழுப் பயனையும் அடைய முடிவதில்லை. ஆணவம் முழுவதும் ஒதுங்கி நிற்கும் போது முன் விரும்பாத ஒன்றைப் பின்னால் விரும்ப முடிகிறது.

இவ்வாறு காலத்துக்கும், இடத்துக்கும், சூழ்நிலைக்கும் ஏற்றபடி படிப்படியாக உயர்ந்து உயிர் பரிபூரணமாக பரிணாமத்தை அடைகிறது பெரு வாழ்வைப் பெறுகிறது கடவுள் அனுபவத்தில் திளைக்கிறது.

கடவுள் என்பது ஏன்? என்ற கேள்விக்குத் தெளிவாக விளக்கம் சொல்லி இருக்கிறார் மெய்கண்டார்

உணர் உரு அசத்து எனில் உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சவசத்து ஆம் என
இரண்டு வகையில் இசைக்குமன் உலகே

உணரக்கூடிய உருவம் கானல் நீர் போன்றது. இது சத்து இல்லாத பொருள் இந்த இரண்டும் அல்லாதது சிவசத்து என்சிற கடவுள் ஆகும் சிவசத்து என்பதைச் செம்பொருள் என்பர்.

"சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு" என்கிறார் திருவள்ளுவர்


## சோதிடக் கணிப்பீடுகள்

உங்கள் ஜாதகங்களை கணனியில் (computer) துல்லியமான கிரகஸ் புடங்களுடன் கணித்து இராசி, நவாம்ச, பாவ, சப்தவர்க்க, அஷ்டகவர்க்க, கிரக பலம், தசா, புத்தி, அந்தர விபரத்துடன் பெறலாம். வெளிநாட்டில் பிறந்தவர்களின் ஜாதகங்கள் அந்நாட்டு நேரத்தில் கணிக்கப்படுகின்றன.

உங்கள் ஜாதகங்களிற்குரிய விரிவான வருடப் பலனை எம்மிடம் அறிந்து கொள்ளலாம். computer floppy diskல் பதிவு செய்தும் ஜாதகங்களைப் பெற முடியும். ஜாதகம் கணிக்க நீங்கள் தரவேண்டிய விபரம், பெயர், பிறந்த திகதி, நேரம், பிறந்த இடம் மட்டுமே

VIGNES

465/1a havelock Road, Colombo 6,Sri Lanka
Telephone : 074-513233 Foreign Callers Dial : 00 9474 513233

# திருக்கோணமலை
# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய



# ஸ்ரீ சக்ர பூர்ண மஹா மேரு

யாக ங்களில் உயர்ந்தது அச்வமேதம். தேவர்களில் உயர்ந்தவர் ஹரி யானைகளில் உயர்ந்தது ஐரவாதம். குதிரைகளில் உயர்ந்தது பஞ்சகல்யாணி. பசுக்களில் உயர்ந்தது காமதேனு. மிருகங்களில் உயர்ந்தது ஸிம்ஹம் பெண்களில் உயர்ந்தவர் ஸீதை. அதுபோல யந்திரங்களில் உயர்ந்தது சக்ரம் எனப்படும். ஸ்ரீ சக்ரபூர்ண மஹாமேரு.

விநாயகன் உறையுமிடம் ஆனந்தபுரி. முருகன் இருக்குமிடம் ஸ்கந்தலோகம். ப்ருமன் இருக்குமிடம் ஸத்யலோகம். நாராயணன் இருக்குமிடம் வைகுந்தம். இந்திரன் இருக்குமிடம் தேவலோகம். சிவபெருமான் இருக்குமிடம் கைலாயம்.

அதுபோல அன்னை ஜகன்மாதா அம்பிகை எமபெருமானுடன் கூடி இன்புற்று உலகத்து உயிர்கள் உய்யும் பொருட்டு அருள்பாலிக்கும் இடம் ஸ்ரீ புரம் எனக் கூறப்படும் ஸ்ரீ சக்ர பூர்ண மாஹாமேரு பீடம் என்னுமிடமாகும். அன்னையுறையும் இந்த யந்திரத்தை கோடுகளாக வரைந்து வைத்தால் அது ஸ்ரீ சக்ரம் எனவும் அதற்கு வடிவம் கொடுத்தால் அதுவே மஹாமேரு எனவும் கூறப்படும். இவ்வாலயத்தில் காணப்படுவது அதுபோன்ற மஹாமேருவாகும்

அன்னை உறையும் இந்த மஹோமேரு.9 ஆவரணம் என்னும் கோட்டைகளைக் கொண்டது. அரசர்கள் அரண்மனையைச் சுற்றிகோட்டை மதில்களை அமைத்துக் காப்பதுபோல், தேவியின் ஸ்ரீ சக்ர புரம் என்னும் கோட்டையைச் சுற்றி 9 கோட்டைகள் உண்டு.ஒவ்வொரு கோட்டையையும் சேனாதிபதிகள் காப்பது போல் பெண்சேனாதிபதிகள் காவல் காக்கின்றனர். ஒவ்வொரு கோட்டையும் ஒவ்வொரு அமைப்பைக் கொண்டது.

1.முதலில் சதுரக் கோட்டை: த்ரைலோக்ய மோஹனச்சக்கரம் என்று பெயர்.இதனை ப்ரகடயோகினிமுதலான 8 தேவியர் காவல்புரிகின்றனர்.

2. தாமிரை இதழ்போன்ற 16 அமைப்புக்கள்கொண்ட பரிபூரக சக்ரம் எனும் கோட்டை. இதை குப்தயோகினி முதலான16 தேவியர் காவல் புரிகின்றனர்.


3. தாமரை இதழ் போன்ற அமைப்பைக் கொண்ட 8 தளங்களை கொண்ட கோட்டை. இதற்கு ஸர்வஸம்சேஷரபன சக்ரம் என்று பெயர், இதனை குப்ததரயோகினி முதலான 8 தேவியர் காவல் புரிகின்றனர்.

4. 14 முக்கோணங்களைக் கொண்ட ஸர்வஸோபாக்யதாயக சக்ரம் என்ற பெயரைக் கொண்டது இதனை ஸம்ப்ரதாய யோகினி முதலான 14 தேவதைகள் காவல் புரிகின்றனர்.

5.10 முக்கோணங்களைக் கொண்ட ஸர்வார்த்த ஸாதக சக்ரம் என்ற பெயரைக் கொண்டது. இதை குலோத்தீர்ண யோகினி முதலான 10 தேவதைகள் காவல் புரிகின்றனர்.

6. 10 முக்கோணங்களை கொண்ட சர்வரஷாகர சக்ரம் என்ற பெயரினைக் கொண்டது. இதனை நிகர்ப்பயோகினி முதலான பத்து தேவதைகள் காவல் புரிகின்றனர்.

7. முக்கோணங்களைக் கொண்ட ஸர்வரோககர சக்ரம் என்ற பெயரினைக் கொண் டது. இதனை ரஹஸ்ய யோகினி முதலான 8 தேவதைகள் காவல் புரிகின்றனர்.



*திருக்கோணமலை பத்ரகாளி அம்மன் ஆலய பிரதமகுருவும் ஆதீன கர்த்தாவுமான வேதாகம மாமணி பிரம்ம ஸ்ரீ சோ. இரவிசந்திரக் குருக்கள்*

8. ஒரே முக்கோணம் ஸர்வஸித்தப்பிரதாயக சக்கரம் என்ற பெயரினைக் கொண்டது. இதனை அதிரஹஸ்ய யோகினி முதலான தேவதைகள் காக்கின்றனர்.

9. பிந்துஸ்தானம் எனப்படும் ஸர்வானந்தமயசக்கரம் என்ற பெயரினைக் கொண்டது. இது ஒரு புள்ளி பேரன்ற இடமாகும். இதில் பரதேவதையான அம்பிகை ஸ்ரீ லலிதா மஹாத்ருபுர சுந்தரியாக இருந்து கொண்டு அருள் பாலிக்கின்றாள்.

இந்த அமைப்பைக் கொண்ட ஸ்ரீ சக்ரம் உலகம் உய்யும் பொருட்டு, ஆதிசங்கரரால் பாரத தேசத்தில் காஞ்சி , திருவானைக்கா, மற்றும் திருஒற்றியூர் போன்ற தலங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மக்களின் துயரைப் போக்கி, அன்னையின் அருளை அளிக்கும் ஒரு சிறந்தமார்க்கம் இந்த மாஹாமேரு வழிபாடாகும் . அன்னையிடம் நாம் செய்யும், அபசரத்தினால் உண்டாகும் கோபம் தணிய, தேவிக்கு இந்த சக்ர ஸ்தாபனம் செய்து வழிபட்டால் எல்லா நன்மையும் பெறுவது திண்ணம்.

மக்கள் அன்பும் அறமும் நிரம்பப்பெறும் பொருட்டும் எங்கும் அமைதி ஆனந்தம் செழிக்கும் பொருட்டும் இந்த த்ரிகோணமலையில் வீற்றிருக்கும் பத்திரகாளி அம்மன் ஸன்னிதியில் பெருமுயற்சியுடன் இந்த மேருஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது. இதை வழிபட்டு அபிராமிபட்டரின் வாக்கியத்தின் படி.

தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர்
என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

பொறுமையே சத்யம்
பொறுமையே தர்மம்
பொறுமையே வேதம்
பொறுமையே அஹிம்ஸை
பொறுமையே அனைத்தும்
பொறுமையே மகிழ்ச்சி
ஸ்வர்க்கம் எல்லாம்
சத்திய சாயி பாபா

# சிறுவர் கண்ட சாயி



புட்ட பர்த்திக்கு 50மைல் தொலைவில் இருந்த ஒரு கிராமத்தில் சிறுவர்கள் சிலர் ,அவர்கள் பள்ளிப் பிள்ளைகள். பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரை தரிசிப்பதற்காக நடந்தே புறப்பட்டு விட்டார்கள். வழியில் எத்தனையோ சிரம்மப்பட்டு சென்று பாபாவை அடைந்தனர்.

பாபா அவர்களை அன்புடன் அழைத்து தட்டிக் கொடுத்தார். நான்தான் என்றும் உங்களுடன் உங்கள் கிராமத்திலேயே இருக்கின்றேன். என்னைத் தேடி இவ்வளவு கஸ்டப் பட்டு ஏன் நடந்தே வந்தீர்கள் என்று கூறி அவர்களை அங்கே தங்க வைத்து கைநிறைய பல பட்சணங்களுடன் அனுப்பி வைத்தார்.

அச்சிறுவர்களுக்கு கிராமத்துக்குச் சென்ற பின்பும் பிரசாந்தி நிலையத்தின் பஜனையிலேயே நினைவெல்லாம் இருந்தது. அங்குள்ள கோவிலுக்குச் சென்று வரிசையாக அமர்ந்து கைத்தாளமிட்டு பஜனை செய்யத்தொடங்கிவிட்டனர். உண்மையாகவே அவர்கள் பாபாவின் எண்ணத்தில் ஆழ்ந்து போயினர். என்ன ஆச்சரியம் கோவிலில் இருந்த லிங்கம் மறைந்து அந்த இடத்தில் சத்திய சாயி பாபாவே நின்று கொண்டிருந்தார். எல்லோரும் அவர் பாதங்களில் நெஞ்சான் கிடையாக விழுந்து வணங்கினர். அவர்களை வாழத்தி அருளிய பாபா சட்டென மறைந்தார். மீண்டும் சிவலிங்கம் தோன்றியது. இங்குற்றேன் என்று இலிங்கத்தே தோன்றினார் - என்ற வாசீகர் வாக்கு இங்கு அப்படியே பொருந்துகிறது.

விஜயா சண்முகசுந்தரம்
புத்தளம் சாயி சமித்தி

# உயிர்கள் மீது அன்பு வேணும்

பசுவை தெய்வமாக வழிபடுகிறோம். அதற்கு பொங்கல் செய்கிறோம். பொட்டிட்டு மாலை போடுகிறோம். அதன் சாணியை விபூதியாக்கி சமயச் சின்னமாக அணிந்து கொள்கிறோம். எருத்து மாடுகளை வயல் உழவும் வண்டி இழுக்கவும் உபயோகப்படுத்துகிறோம்.


தாய்ப்பால் இல்லாத குழந்தைகளை பசுத்தாய் தானே பால் கொடுத்து வளர்க்கிறது. நோயாளிகளையும் முதியோர்களையும் கூடப் பால் கொடுத்துக் காப்பாற்றுகிறது. வெளிநாடுகளில் இருந்து இலட்சக்கணக்காக வந்து சேரும் பால் மாப் பெட்டிகளும் பசுக்களின் கொடைகளே.

பசு சாதுவான மிருகம் என்று எல்லோரும் சொல்லுவார்கள். கொம்பிருந்தாலும் அது மனிதரை இடிப்பதில்லை. மனிதன் கொம்பில்லாமலே மற்ற மனிதர்களை இடிக்கின்றான். கொலையும் செய்கின்றான். மனிதன் மிருகமாக மாறி விட்டான். பசு சாதுவான பசுவாகவே இருக்கிறது.

பசுவும் கடினமாக உழைக்கும் எருதும், குதிரையும், யானையும், ஆடும், மானும் இன்னும் பல மிருகங்களும் தாவர உணவையே உண்கின்றன. பலமான வேலைகளைச் செய்கின்றன. பலத்துக்காக உண்பதாகப் பொய்யைச் சொல்லிக் கொண்டு நாக்கின் சுவைக்கு அடிமைப்பட்டு வாய்க்கு உருசிக்காக ஆடு, மாடுகளையும் மாமிச உணவுகளையும் சாப்பிடுகின்றான். புத்தி சாதுாரியத்தினால் தான் உண்பது சரி எனவும் வாதிக்கிறான். இன்னும் மேலே போய் கடவுள் தன் பக்கம் தான் என்றும் சொல்லித் தன்னையே ஏமாற்றுகிறான்.

மனிதத் தன்மை, மனிதப் பண்பு உள்ளவன் தான் மனிதன். மனிதன் எந்த உயிரையும் கொல்ல மாட்டான். மற்றவர் மனம் நோக நடக்க மாட்டான். மாமிச உணவை உண்ண மாட்டான். கோயிலை வழிபட்டு விட்டு நேரே இறைச்சிக் கடைக்குப் போகிறவர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்காக இரக்கப்பட்டு இவர்களுக்கு நல்லறிவைக் கொடுக்கும் படி இறைவனைக் கேட்டுக் கொள்வோம்.

சைவ சமயத்தவர்கள் மாமிசம் புசிக்கக்கூடாது. சொந்த வீட்டில் எதையாவது செய்து பாவத்தைத் தேடிக் கொள்ளாதீர்கள். பொது விருந்துகளில் மாமிசத்தைச் சேர்த்துக் கொள்ளாதீர்கள். சைவ விருந்தாக நடத்துங்கள் என்று பல சந்தர்ப்பங்களில் பணிவாக கேட்டுக் கொண்டேன். எவரும் இணங்கியபாடில்லை. அதற்கேற்ற துணிவும் இல்லை. அதில்லாமல் என்ன விருந்து என்று கேட்டவர்களும் உண்டு.



பொ.கந்தையா காந்தி ஆசிரியர்

வேதநூல்கள் சமயநூல்கள், நீதிநூல்கள், புராண இதிகாசங்கள் எல்லாமே உயிர்க் கொலையையும் மாமிச உணவையும் கண்டித்துள்ளன. எல்லா ஜீவராசிகளும் கடவுளுடைய பிள்ளைகள் . அவைகளிடம் அன்புகாட்டவேண்டும்.

பசுவதை, பகிடிவதை, சித்திரவதை, மனிதவதை இப்படி எத்தனையோ வதைகள் உள. எல்லாம் மனித குலத்தால் செய்யப்படுபவை. காரணம்

பசு சாதுவான மிருகம் என்று எல்லோரும் சொல்லுவார்கள். கொம்பிருந்தாலும் அது மனிதரை இடிப்பதில்லை. மனிதன் கொம்பில்லாமலே மற்ற மனிதர்களை இடிக்கின்றான். கொலையும் செய்கின்றான். மனிதன் மிருகமாக மாறி விட்டான். பசு சாதுவான பசுவாகவே இருக்கிறது.

அறியாமை. இவற்றைத் தவிர்ப்பதாயின் அறியாமையில் புதையுண்ட பாமர மக்களிடையே அறிவையும் ஆத்மீகத்தையும், ஞானத்தையும். நீதியையும் புகட்ட வேண்டும்.

மகாத்மா காந்தியடிகள் மேல்நாடு சென்ற போது தாயார் மூன்று சத்தியங்களைக் கேட்டு வழியனுப்பினார்கள். காந்தியடிகள் மூன்று சத்தியங்களையும் காத்துத் தாய் நாடு திரும்பி சேவை செய்து மகாத்மா எனப் போற்றப்பட்டார்கள். மூன்று சத்தியங்களாவன மது அருந்த மாட்டேன். மாமிசம் புசிக்க மாட்டேன். பிற மாதவரை விரும்ப மாட்டேன். பெற்றோர்களும் ஆசிரியர்களும் பின்வருவன போன்ற சத்தியங்களை மாணவர்களிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மது அருந்த மாட்டோம்
மாமிசம் புசிக்க மாட்டோம்
பிற மாதவரை விரும்ப மாட்டோம்
எந்த உயிரையும் கொல்ல மாட்டோம்
பசு வதை செய்ய மாட்டோம்
பகிடிவதை செய்யமாட்டோம்
பொய் சொல்ல மாட்டோம்
களவு எடுக்க மாட்டோம்
கோபங் கொள்ள மாட்டோம்
தெய்வத்தை இகழ மாட்டோம்
தற்கொலை செய்ய மாட்டோம்

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
ஆனந்தம்

பேரன்புக்குரிய வாசகர்களே,

பல்சமயக் கருத்துக்களை ஏந்தி வரும் பேழையாக ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழி இதழ்கள் உருவாக வேண்டும் என்ற நெடு நாளைய எண்ணம் இறையருளாற் கை கூடியுள்ளது. இவ்விதழ் காலாண்டிதழாக தற்போது வெளிவந்துள்ளது.

இவ்விதழ் தொடர்ச்சியாக மலர்ந்து பல்சமய ஆன்மீக நறுமணம் பரப்பி நீடித்த பயன் தர சந்தா செலுத்தி ஊட்டமளிக்குமாறு கோருகின்றோம்.

காலாண்டுச் சந்தா:
இலங்கை ரூ 30 வெளிநாடு £ 1.00 (தபாற் செலவு உட்பட)

ஆண்டுச் சந்தா
இலங்கை ரூ120 வெளிநாடு £ 4.00 (தபாற் செலவு உட்பட)

காசோலை, காசுக்கட்டளை " Sivagami Ammal Publications" என்ற பெயருக்கு எழுதப்பட வேண்டும். கீழ் வரும் படிவத்தை நிரப்பி காசோலை, காசுக் கட்டளையை இணைத்து எமது முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வண்ணம்
வே.வரதசுந்தரம்
ஆசிரியர்

சந்தா விண்ணப்பம்
ஆசிரியர்,
சந்நிதி,
39, 36வது ஒழுங்கை, கொழும்பு 06, இலங்கை.

நான் சந்நிதி காலாண்டிதழுக்கு காலாண்டு ஆண்டுச் சந்தா செலுத்த விரும்பி இத்துடன் ரூபா .......................க்கான காசோலை, காசுக் கட்டளை அனுப்புகிறேன்.

அனுப்ப வேண்டிய முகவரி :

..............................................................

..............................................................

..............................................................

| காசோலை காசுக் கட்டளை இல | வங்கி/; தபால் நிலையம் | திகதி |
|---|---|---|
| | | |

..............................

கையொப்பம்

# பாபா பக்தி சுவடுகள்



சத்திய சாயி ஈசன் பதிக்கும் சுவடுகள் கண்டு, கேட்டு, உணர்ந்து மெய்விதிர் விதிர்த்துக் கண்ணீர் மல்கி நெஞ்சம் குழைகிறது.

வே.வரதசுந்தரம்

## காருண்ய சீலா! தீனதயாளா! புட்டபத்தி வாசா! சாயி ஈசா!

### புட்டபர்த்தியில் சிவராத்திரி

சிவராத்திரி தினம் இந்துக்களுக்கு மிகவும் புனிதம் வாய்ந்த தினமாகும். சாயி பக்தர்கள், அவர்கள் எந்த மதத்தவர்கள் ஆனாலும் சிவராத்திரி தினத்தினை பயபக்தியுடன் பஜனை செய்து அனுஷ்டிப்பர். அன்றைய தினம் புட்டபர்த்திக்கு எம்மை அழைத்துச் செல்கிறார் சாயி அன்பர் ரா.கணபதி அவர்கள்.

சிவராத்திரியன்று புட்டபர்த்தியை பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் திரண்டு பூலோக கைலாசமாக்கி விடுவர்.
பகலில் ஷீர்டிசருக்குப் பர்த்தீசர் விபூதி அபிஷேகம் செய்வார். அதில் அற்புத விசேஷமுண்டு. அணுக்கத் தொண்டரொருவர் ஷீர்டி பாபா சிலைக்கு மேல் ஒரு சிறிய மரக்குடத்தைத் தலைகீழாகப் பிடித்திருப்பார். பர்த்தி பாபா அதனுள் கையை விட்டுக் குடைவார். உடனே அதிலிருந்து கொட்டுமோ, கொட்டுமோ, அப்படியொரு சிறு குன்றாகவே விபூதி கொட்ட சுமார் இரண்டடி உயர ஷீர்டிச் சிவபிரான் அதில் முழுகி விடுவார். அம்பாள் ஈசனுக்கு செய்யும் அபிஷேகம்!

அன்று அகண்ட பஜனை நடக்கும். மாலையில் பாபா மறுபடி வருவார். பஜனை பாடுவார். சிவராத்திரி மகிமை, லிங்க தத்வம் இவை பற்றி உரையாற்றுவார். உரையின் நடுவிலேயே லிங்கம் உந்திக் கொண்டு உந்தியிலிருந்து புறப்பட ஆரம்பிக்கும். அவதிப்படுவார் சில நிமிஷம்.

லிங்கோத்'பவகரா லிங்கேச்வரா
பர்த்தீச்வரா, மாம் பாகி ப்ரபோ!
பாகி ப்ரபோ, முதம் தேகி விபோ!

பக்தர்கள் பரவசப் பதறலோடு பன்னிப் பன்னிப் பாடியவண்ணம் இருப்பர்.
ஐயனின் திருவாயைத் திறந்து கொண்டு லிங்கமும் உத்பவமாகும்.

ஆனந்த ஸாயி அவற்றை அனைவருக்கும் காட்டுவார். அந்தந்த ஆண்டு வெளியாகும் லிங்கத்திலுள்ள தனித் தன்மையை விவரிப்பார். ஒரு சமயம் லிங்கமே பிரபஞ்ச ரூபகம் என்பதற்கேற்ப, அதற்குள்ளேயே ஸீர்ய மண்டலம், க்ரசங்கள், தாரா கணங்கள் போன்ற அமைப்புக்கள் காணப்பட்டன. இன்னொரு சமயம் அம்பாள், ஈச்வரன் என்ற பேதங்கள் ஆத்மலிங்கத்தின் இரு பாதிகளில் அடையாளங்கள் காட்டின. இப்படி எத்தனையோ நுணுக்கங்கள்!

உரை முடித்து ஓரிரு பஜன்கள் பாடிவிட்டு இரவு ஒன்பது மணி அளவிலே பாபா உள்ளே சென்று விடுவார். உத்பவத்துக்குப் பின் அவரது அழகைச் சொல்லி முடியாது என்பர் அடியர். ஸாஷாத் சிவத்தின் அன்பு வடிவாக, அன்பே சிவமாக , பராசக்தியாகவே அப்போது அவரைச் சொல்லலாம்.

சக்தி – சிவம் என்பன மானுட தேக உறவில் கட்டுப்பட்ட வ்யக்திகளல்ல. பரப்பிரம்ம தத்வமே இப்படி இரண்டாகத் தோன்றுவது. எனவே சிவத்தோடு அப்படியே கூடி இருப்பதால் சக்தியை சிவத்தின் ஸதி என்றாலும், சிவம் என்ற அடிப்படை அமைதியிலிருந் தே சக்தி என்ற காரிய ஆற்றல் பிறப்பித்தால் இவள் சிவத்தின் மகளுமாகிறாள். இன்னொரு நிலையிலோ, தான் இருக்கிறோம் என்று சிவம் உணரவே ஒரு சக்தி வேண்டியிருப்பதால், சிவம் தன்னை உணருமுன் சக்தி இருப்பதாகவும், எனவே இச் சக்தியே சிவத்தின் தாய் என்றும் கூறுவர். திருமந்திரத்தில் தாரம், மகள், தாய் என்ற மூன்று நிலைகளில் சிவமென்ற நிர்குண மெய்ப் பொருளும் அதன் ஆற்றலான ஸகுண மகா சக்தியும் தொடர்புறுத்தப் படுகின்றன.

எம் பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமையன்

என அத்தனை உறவுகளையும் திருவாசகம் கூறும். சிவராத்திரியில் லிங்கங்களைப் பெற்றெடுக்கும் சிவ மாதாவாக பாபா இருக்கிறார்!

ஆண்டுதோறும் அவர் லிங்கோத்பவம் செய்ததன் ரகசியங்கள் நமக்குத் தெரியவில்லை. தெரிய வேண்டியதுமில்லை. எண்ணிறந்த மக்கள் சிராத்திரியில் ஒன்று கூடி இரவெல்லாம் ஈசன் நினைவில் பஜனை செய்து பாவன உணர்வு பெறச் செய்த புண்ணியப் பணி இந்த அற்புத உத்பவத்தைக் கருதியே நிகழ்ந்தது என்பதொன்றே நமக்குப் போதும். இப்படியொரு இயற்கைக்கு அதீதமான சம்பவம் நிகழ்ந்ததுதான் ஆயிரமாயிரம் மக்களை ஆகர்ஷித்து புனித சிவராத்திரியில் அவர்களை சிவ ஸ்மரணத்தில் பரவசமாக ஆழ்த்தியது.

பாபா சென்ற பிறகும் விடிய விடிய பஜனை நடக்கும் பல்லாயிரவர் கண் விழித்து பக்தி புஞ்சிதமாகச் செய்யும் அற்புத பஜனை!

## அவுஸ்திரேலியாவில் சாயி ஒளி

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் திரீசும், அவரது கணவர் கோஸ்தாவும் இத்தாலிய தம்பதிகள். கோஸ்தா சாயி அன்பர். பகவானிடம் அளவற்ற பக்தி பூண்டவர். இவர்கள் அவுஸ்திரேலியாவில் சிட்னியில் வசிக்கிறார்கள். இருவரும் றோமன் கத்தோலிக்கர்கள்.

கோஸ்தா சாயி பகவானை வழிபட்ட போதும் அவரது துணைவியார் இந்திய வழிபாட்டு முறைகளை வெறுத்தார். இருப்பினும் இத்தம்பதியரின் வாழ்வில் நிகழ்ந்த அற்புதம் திரீசின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்து விட்டது.

1995ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9ம் திகதி அந்த அற்புதம் நிகழ்ந்தது. அதிகாலை இரண்டு மணி இருக்கும். தனது படுக்கை அறைக்கும், வழிபாட்டு அறைக்கும் இடையே உள்ள குறுகிய நடை பாதையில் பிரகாசமான ஒளிக் கீற்றினை திரீஸ் அவதானித்தார்.

திடுக்கிட்ட திரீஸ் ஒளி வந்த திசையை நோக்கி நகர்ந்து வழிபாட்டறைக்குச் சென்றார். என்னே அதிசயம்!

கோஸ்தா தனது வழிபாட்டுக்கென விபூதிக் குமிழ் வைத்திருந்தார். அதனில் இருந்தே இவ்வொளி வருவதைக் கண்டார் இவ்வொளி தொடர்ந்து இரண்டு வாரங்கள் எரிகிறது.

பிறந்த குழந்தையைப் பார்ப்பது போல் அதிசயத்தில் அவர் அவ்வொளியைப் பார்த்துக் கொண்டே இருந்தார். அதிர்ச்சி காரணமாக அவரது எடையும் குறைந்தது. இளைத்துப் போன அவர் நிலத்தில் ஒரு படுக்கையை விரித்து அவ்வொளியைப் பார்த்தவாறு இருந்தார்.


திரீஸ்

அதிகாலை வேளை அன்னை மரியாள் அங்கு தோன்றினார். மகனே! நீ களைத்து விட்டாய், நித்திரைக்குச் செல் என்று அவரது தலையை வருடியவாறு ஆறுதல் கூறினார்.

சிறிது நேரத்தில் யேசு நாதர் தோன்றினார். ஈற்றில் பகவான் பாபா தோன்றினார். நான் தான் மேரியாகவும், யேசுவாகவும் உன்முன் தோன்றினேன்!. விபூதிக் குமிழில் உள்ள சிறு சிலுவையில் இருந்து தோன்றிய ஒளியே இது இதனை சாயி ஒளி என்று அழையுங்கள். அது தொடர்ந்து ஒளி தருவதற்கான மெழுகினை நான் தந்து கொண்டிருப்பேன்! இப்படி பாபா கூறினார்.

பின்னர் தம்பதிகள் பாபாவை புட்டபர்த்தியில் சந்திக்கிறார்கள். எந்த நாமத்தினை ஜெபித்து அழைத்தாலும், எந்த வடிவத்தை வணங்கினாலும், இறைவன் ஒருவன்தான் – இப்படி பாபா விளக்கினார்.



கோஸ்தா

# திருமணம் நிறைவேறியது

நிமால் சேதரா என்ற இலங்கையர் பாபா பற்றி 4 புத்தகங்களை எழுதி உள்ளார். அவர் தனது அனுபவத்தை பின்வருமாறு கூறினார்:–

புட்டபர்த்தியில் இருந்து நாடு திரும்பிய இரண்டு நாட்களில தாமதமாகி இருந்த எனது சகோதரியின் திருமணம் நிச்சயமாகியது' மணமகனும் அவரது பெற்றோர்களும் பெண் பார்க்க எமது வீட்டிற்கு வந்தார்கள் எனது சகோதரி வழிபாட்டறைக்குச் சென்று பகவானுக்கு விளக்கேற்றி வழிபட்ட பின்னர் தான் மணமகனைச் சந்திக்க வரவேற்பறைக்குச் சென்றார் உள்ளே இருந்த எனது இரண்டாவது சகோதரி அவ்வேளை வழிபாட்டறை வாயிலில் பாபா சிரித்தவாறு நிற்பதையும் கையைத் தூக்கி ஆசிர்வதிப்பதையும் கண்டு அதிர்ந்து போனார்.

இரண்டு வாரங்களிலே அமைதியான சூழலில் திருமணம் நிறைவடைந்தது.

## சிவசுப்பிரமணியம் நினைவுப் பரிசில்



சென்றாண்டு மலர்ந்த சந்நிதி இதழ்களில் வெளியான சிறுவர் ஆக்கங்களில் சிறந்தவை என்று நடுவர் குழு தெரிவு செய்த மாணவ மாணவியர் விபரம் அடுத்த இதழில் வெளியாகும்.

மாணவ, மாணவியர் எழுதும் சமயம், சமயம் சார்ந்த ஆக்கங்கள் தொடர்ந்து சந்நிதியில் வெளிவரும் பின்வரும் கூப்பனை நிரப்பி அனுப்பவும்.

சந்நிதி – சிவசுப்ரமணியம் நினைவுப் பரிசில்

முழுப்பெயர்........................................................

முகவரி ........................................................

........................................................

வகுப்பு ........................................................

பாடசாலை........................................................

இது எனது சொந்த ஆக்கம்

........................................ ........................................

பெற்றோர் அதிபர்,ஆசிரியர் மாணவர், கையொப்பம்

திகதி...................

[redacted]

ஒரு பறவை எவ்வளவு உயரமாகச் சிறகடித்துப் பறந்தாலும் அது ஈற்றில் ஒரு மர உச்சியில் ஆறி அமரும். அது போல ஒருவன் எவ்வளவு அகங்காரமாக இறை நம்பிக்கையற்று அலமந்து வாழ்ந்தாலும் இறுதியில் அவன் தெளிவு பெறுவான்.

இறைவா1 எனக்கு ஆறுதலைத் தா! இன்பத்தைத் தா! தைரியத்தைத் தா!சாந்தியைத் தா! என்று குழறுவான்.

– இவ்வாறு பாபா கூறுவார்.

# ஆதிரை நாள் காணாது போதியோ!

சிவபெருமானது சிறந்த மூர்த்தங்களுள் ஒன்று நடராஜ வடிவம். இது ஐந்தொழிலைக் குறிக்கும் ஆனந்த தாண்டவ வடிவம் இடது பாதம் தூக்கி வலது பாதம் ஊன்றியதாகும் இந்த தாண்டவத்தின் பொருள் சாத்திரங்களில் ஆறாவதாக இடம்பெறும் திருவதிகையைச் சேர்ந்த மனவாசங்கடந்த தேவனார் தனது உண்மை விளக்கத்தில் அழகாக எடுத்துச் சொல்கிறார்.

தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

என்றதற்கமைய உடுக்கிலிருந்து பிறக்கும் நாதம் படைத்தலையும், அபயகரம் காத்தலையும், அக்கினி ஏந்திய கரம் அழித்தலையும், முயலகன் மேல் ஊன்றிய பாதம் மறைத்தலையும் தூக்கிய திருவடி அருளளையும் குறிக்கின்றது. இந்த ஆனந்த தாண்டவத்தில் சிவகாம சுந்தரியின் திருவுருவம் இடப்பாகத்தில் இடம் பெறுதல் அவசியம்.

சிவபெருமான் அபிஷேகப்பிரியர். மஹாவிஷ்ணு அலங்காரப்பிரியர். இதன்படி சிவபெருமானுக்கு ஆறு விஷேச அபிஷேக தினங்களுண்டு. அது சிவபெருமானின் நடராஜ வடிவுக்கே செய்யப்படுவதும் அதன்பின் அலங்காரம் செய்யப்பட்டதன்பின் தரிசனத்திற்காக விடப்படுவதும் வழக்கமாகும்.

நடராஜ அபிஷேக தின விபரம்

1) சித்திரை மாதத்தில் வரும் திருவோண நட்ஷத்திரத்தின்
மத்தியான வேளை அபிஷேகமும் சாயரஷ வேளையில் தரிசனமும்
2) ஆனிமாத உத்தரத்தில் இரவு அபிஷேகமும் உதயத்தில் தரிசனமும்
3) ஆவணி மாத பூர்வபஷ சதுர்த்தசி திதியில் மத்தியான வேளையில் அபிஷேகமும் சாயரஷையில் தரிசனமும்
4) புரட்டாதி மாத பூர்வ பஷசதுர்த்தசி திதியில் மத்தியான வேளையில் அபிஷேகமும் சாயரஷையில் தரிசனமும்
5) மார்கழி மாத திருவாதிரை நட்ஷத்திரத்தில் இரவில் அபிஷேகமும் உதயத்தில் தரிசனமும்
6) மாசி மாத பூர்வ பஷ சதுர்த்தசி திதியில் மத்தியான வேளையில் அபிஷேகமும் சாயரஷையில் தரசளம் நிகழ்வதுண்டு

சிதம்பரத்திலே திருவாதிரைக்கு முதல் நாள் இரவு மூன்றாம் சாமம் தொட்டு நடராஜப் பெருமானுக்கு பெருமுழுக்குச் செய்வார்கள். விடிந்ததும் அங்கே தேர்த்திருவிழா தேருக்குச் சுவாமி புறப்படுவதற்கு முன்னர் உள்வீதி வலம் வருதல் இடம்பெறும். அதில் திருவாசக முதலி எனப் போற்றப்படும் மணிவாசகப் பெருமான் சுவாமியை நேர் முகமாக பார்த்த வண்ணம் அதாவது ஸ்வாமிக்கு புறமுதுகு காட்டா வண்ணம் எடுத்து வரப்படுவார். திருவாதவூரடிகள் புராணம் படிப்பதும் பயன் சொல்வதும் மரபு.

சபாநாயகர் மலர் விமானத்திலே தேருக்கு எழுந்தருளுங் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். மார்கழித் திருவாதிரைச் சிறப்பை – ஆதிரை நாள் காணாது போதியோ பூம்பாவாய் – என்று தனது தேவாரத்தில் பாடியுள்ளார்.

திருவாதிரை நஷத்திரம் சிவபெருமானின் நஷத்திரம் ஆதி சங்கரர் அவதரித்ததும் திருவாதிரை நஷத்திரத்தில் அது மட்டுமல்லாமல் திருஞான சம்பந்தர் திருவவதாரம் செயததும் திருவாதிரை நட்ஷத்திரமாகும். ஆனால் சித்திரை மாதம் அது. சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தை பாடத்தொடங்கியதும் ஒரு சித்திரை மாதத்து திருவாதிரையில். பின் அப்பெரிய புராணத்துக்கு பொருள் விளக்குமாறு அரசன் சேக்கிழாரிடம் கேட்டபோது அவர் பொருள் விரிக்கத் தொடங்கியதும் ஒரு சித்திரை மாதத் திருவாதிரை நாளாகும்
பொதுவாக திருவாதிரை நட்ஷத்திரம் சிறப்பானது என்பது இவற்றினால் தெரிய வருகிறது அல்லவா?

பிரம்மஸ்ரீ வரதராஜ சிவகுமாரக் குருக்கள்
முன்னாள் மட்டக்களப்பு ஆனைப்பந்திப் பிள்ளையார் ஆலய பிரதமகுரு

# சுவாமியின் திருக்கோணமலை விஜயம்

சுவாமியின் திருக்கோணமலை விஜயத்திற்கு மூலமாக அமைந்த அமைப்பு சுவாமி சச்சிதானந்த சரஸ்வதி மாதாஜி உருவாக்கிய திருக்கோணமலை சிவாநந்த தபோவனமாகும். மாதாஜியின் மறைவுக்குப் பின்னால், மாதாஜியினால் நியமிக்கப்பட்டு, தற்போது இத்த போவனத்தின் பாதுகாவலராக இருக்கின்ற திருமதி செல்வம் கல்யாணசுந்தரம், மற்றும் சுவாமிஜியை இலங்கைக்கு வரவழைத்த மற்றைய அன்பர்களுடைய உதவியின் பேரிலும், திருக்கோணமலையில் தபோவனத்துடன் தொடர்புள்ள அன்பர்களின் வேண்டுகோளின் பேரிலும் சுவாமிஜி திருக்கோணமலைக்கு வந்தார்.



சுவாமி நித்தியானந்தர் திருகோணமலை சிவயோக சமாஜத்தில் கருத்துரை வழங்குகிறார்

சுவாமிஜியின் வரவு திருக்கோணமலையில் ஒரு புதிய தெய்வீக உணர்வலையை உருவாக்கியது. சுவாமிஜி ஒரு வார காலமாக தங்கியிருந்து, இங்குள்ள சிறுவர்கள் இல்லங்களுக்கும், ஆன்மீக ஸ்தாபனங்களுக்கும், திருக்கோணமலை நகரிலும் தம்பல காமத்திலுமுள்ள இந்துக் கோயில்களுக்கும் பாடசாலைகளுக்கும் சென்று பஜனையும் அருளுரைகளும் நிகழ்த்தினார்.

உப்பு வெளியில் உள்ள மாதாஜியின் சமாதிக்கு மாலை. சூட்டி அஞ்சலி செய்தத பிற்பாடு தபோவனப பிள்ளைகளோடு, கலந்து உரையாடிவிட்டு, அவர்களுக்கு வேண்டிய சில உபகரணங்களையும் கொடுத்து விட்டு, அக்குழந்தைகள் இறைவனால் பராபரிக்கப்படுகின்றவர்கள், அவர்களின் சேவையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் தெய்வத் தொண்டு செய்கிறோம் என்ற உணர்வுடன் செயலாற்ற வேண்டுமென வேண்டிக் கொண்டார்

சுவாமிகள் இங்குள்ள சிவ–யோக சமாஜம், சத்திய சாயி சமிததி, முருகன் தொண்டர் சபை, திருவள்ளுவர் அகம;' ஞான வைரவர் ஆலயம் முதலிய இடங்களில் ஆற்றிய உரைகள் இறை பக்தியையும், நாம ஜெபத்தையும் பற்றிய முரண்–பட்ட கருத்துக்களைக் கொண்டு இருந்தவர்களுக்கு தெளிவான விளக்கங்களைக் கொடுத்தன. எக்காரணத்தைக கொண்டும் இவற்றை–யொட்டியே பின்பற்றுங்கள், உங்களுக்கு விருப்பமான ஒரு தர்க்கங்ளை தவிர்க்கும் படியும், ஒரு குருநாதனையே மந்திரத்தையே ஜெபியுங்கள். இவை உங்களுக்கு மிக இலகுவாக இருக்கும். இறைவனே குருவாகி வந்து அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறான்– இப்படியான உயர்ந்த கருத்துக்களை தத்துவர்தியாக எடுத்து விளக்குகிறார்.

சுவாமிஜியை பலர் தரிசித்தார்கள். பல கேள்விகளைக் கேட்டார்கள் . பல கோணங்களில் பார்த்தார்கள் எல்லோருக்கும் திருப்திகரமாகவே பதிலளித்தார். சந்தித்தவர்கள் யாரும் வெறுமையோடு, திருப்தியற்றுப் போகவில்லை. நிறைவாகவே சென்றார்கள். எல்லாம் என் குரு நாதன் செயல் என்பார்.

குழந்தைகளோடு குழந்தையாகவே மழலைபேசி மகிழ்ந்தார், நண்பர்களோடு நட்புரிமையோடு பழகினார். பெரியவர்களோடு பெருந்தன்மையாகவே அனுகினார். ஒரு வித்தியாசமான சாமியார் இவர். வேறு எப்படிச் சொல்வது.

இதுவரைக்கும் எந்தச்சுவாமியும் என்னை இப்படிக் கவரவில்லை! எனக்கே ஆச்சரியமாக இருக்கின்றது– என்றார் சுவாமியை தரிசிக்கவந்த அம்மா. அது தெய்வீகமாக இருக்கும்போது, அதனுள் நாம் நுழைகின்றோம் என்பது வெட்டவெளிச்சமல்லவா?

சுவாமிஜி, திருக்கோணமலையில் பல பாடசாலைகளுக்குச் சென்று , உரையாற்றினார். முற்றாக வித்தியாசமான அணுகுமுறை. மாணவர்களுக்கு அவர் கடவுளை பற்றிய தத் துவங்களைப் பேசவில்லை. மாணவர்களைப்பற்றியே பேசினார்.

மாணவர்களிடையே அவர்கள் ஆற்றிய உரையின் சாரமானது:–

தற்கால உலோகாயுத நிகழ்வுகளைப் பின்பற்றுவதனால், இளைஞர்களின் உள்ளம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மிக உயர்ந்த எண்ணங்களை ஏற்றுக் கொள்ளவோ, மெச்சவோ மறுப்பதோடு, பெருமக்கள், இறையன்பர்கள், ஞானிகளின் வழிநடத்தலை ஏற்றுக் கொண்டு உயர்வாக மதித்து, நடைமுறைப்படுத்தவோ, மெச்சவோ முடியாமல், உண்மை நிலையிலிருந்து விலகி, பெற வேண்டியவைகளை பெறாது இழந்து விடுகின்றார்கள். முறையான வழிநடத்தல் இல்லாமையால், இளைய பரம்பரையினர், கெட்ட வசிகரச்சக்திகளுக்குக் கீழ் பட்டு மிகவும் துன்பமடைகின்றார்கள்.

மிகவும் பிரயோசனமுள்ள, மிக உயர்ந்த மகான்களின் உபதேசங்கள் இந்தக் கவலைக்கிடமான போக்கை தவிர்த்து அவர்களை நல்வழி நடத்தும் சக்தி வாய்ந்தவைகள். புத்தர் பெருமனின் உபதேசங்கள் மனதைத் தூய்மைப்படுத்தி மகிழ்சியாக வாழ உதவி செய்யும்.

குறிப்பாக சுவாமிஜி சென்ற ஒவ்வொரு பாடசாலையிலும் அவர் ஆற்றிய உரை:–

நாங்கள் ஏதாவது ஒன்றை அடைய வேண்டும் என்ற இலக்கு முக்கியம். ஏதோ ஒரு நிலைப்பாடு இருந்தாலே போதும், அப்படி ஒரு நிலைப்பாட்டை உறுதியாகப் பிடித்து நடைமுறையில் செயல்படுத்து–



சுவாமி நித்தியானந்தாவை சுவாமி தந்திரதேவா திருகோணமலையில் உள்ள தனது ஆச்சிரமத்தில் வரவேற்கிறார்

கின்றவர்கள், வாழ்க்கையில் நிறையப் பேர் வெற்றியடைந்துள்ளார்கள். அடைந்து கொண்டுமிருக்கிறார்கள் . இதில் புதுமை ஒன்றுமில்லை. வெறும் முயற்சியே. தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய் வருந்தக் கூலி தரும் முயற்சியடையார் இகழச்சியடையார்– என்பது வள்ளுவர் வாக்கு.

நாம் முயற்சி செயயாவிட்டால் தெய்வம் எப்படி உதவி செய்யும். சோம்பேறியின் பக்கத்திற்கு ஆண்டவன் வரவே மாட்டான். ஆகவே, மாணவ மாணவியர்களாகிய உங்களுக்கு, கல்வி, படித்தல், வெற்றியடைதல், அதுவும் சிறப்பு வெற்றியடைதல், அதுதான் உங்கள் குறியாக இருக்கவேண்டும். ஆகவே சோதனையில் எட்டு அதிவிஷேட சித்தி எய்துவோம்– என்று ஒவ்வொருவரும் சங்கல்பம் செய்து கொள்ளுங்கள்.

சிந்தனையை சிதற விடாமல், படிப்பிலேயே கவனம் செலுத்துங்கள் .முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். முயற்சி திருவினையாக்கும். இந்த முயற்சியின் செயல்பாடு மாணவர்களுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் கூடத்தான். ஏன்? மாணவர்களாகிய நீங்கள் தானே பெரியவர்களாக போகின்றீர்கள் உங்கள் வாழ்க்கையில் தொடர்ச்சியாகவே இந்த குறிக்கோள் இருந்து கொண்டேயிருக்கட்டும்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தில் பல நாடுகளில் குண்டுகள் , அணுகுண்டுகள் போடப்பட்டு எத்தனையோ லட்சம் மக்கள் அழிந்தார்கள் . மிஞ்சியவர்கள் மனஉறுதியுடன் செயற்பட்டார்கள், இலட்சியத்தை அடைந்துள்ளார்கள். ஆகையால் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் அந் த இலக்கு இருக்க வேண்டும்.

சுவாமிஜி சென்ற இடங்களிலெல்லாம் ஒவ்வொருவருக்கும் கற்றுக்கொடுத்த பாடம் – உனது கண்களை தெய்வீக கண்களாக்கு, காதுகளை தெய்வீகத்தை தவிர வேறு எதையும் கேட்கச் செய்யாது கைகள் கால்கள் எல்லா அவயவங்களும் தெய்வீக உணர்வலைகளை பிரதி பலிக்கும் செயலில் ஈடுபட ஞானம் ஒரு நாள் கட்டாயம் வரும். பெரியவர்களுக்கு சேவை செய்யுங்கோ! கோயிலுக்கு போங்கோ! காலை மாலை ஓம் நமச்சி வாய பஞ்சாட்சர ஜெபம் செய்யுங்கோ! கடவுளை அங்கிங்கெல்லாம் தேட வேண்டாம். தெள்ளத் தெளிந்தாருக்கு சீவன் சிவலிங்கம். கோயில்களில் தேடிய சிவனை, உங்கள் உள்ளே இருக்கும் ஜீவனில் காணுங்கோ.! ஒவ்வொரு ஜீவராசியின் ஜீவனிலிலும் காணுங்கோ! நாட்டிலே துன்பம். உங்களால் என்ன செய்ய முடியும். ஒன்று செய்ய முடியும். கூட்டு பிரார்த்தனை செய்ய முடியும். ஜெபம் செய்ய முடியும் . கடவுள் இருக்கிறார இல்லையா என்பது எனக்கு தெரியாது. நீ நிரூபித்து காட்டு என்று உங்களிடமே கேளுங்கோ. உங்கள் ஜெபத்தின் ஊடாகவே , உங்கள் உணர்வின் ஊடாகவே இறைவர் தன்னை உங்களுக்குக் காட்டுவார். நம்புங்கோ.

சுவாமி நித்தியாநந்தர் இப்படியான சொற்களினூடாக பேசி விட்டு போக வில்லை. ஒவ்வொருவரின் உணர்வலைகளையும் இறைவன் பால் நிலைநிற்கச் செய்து விட்டு போனார். அவரின் அகத்தின் அழகு முகத்தில் மட்டுமல்ல, அவர் உடல் செயல் , அவரது அமைதியான ஆழமான சொற்களின் மூலம் காணக்கூடியாத இருந்தது. இவர்களை போன்ற மகான்களை பார்ப்பதற்கும், பழகுவதற்கும் இறைவனின் அருள் நிச்சியமாக வேண்டுமென்பதை இப்பொழுது தான் என்னால் உணரக்கூடியதாக இருக்கின்றது. 1983ம் ஆண்டு தொடக்கம் ரிஷிகேசத்தில் சுவாமிஜியோடு நெருக்கமாக பழகக்கூடிய வாய்ப்புக்கிட்டியது. யார் யாருக்கு எது எது வேண்டுமோ, அதனை குறிப்பால் உணர்ந்து உதவும் சீரிய பண்பினை அவரது ஒவ்வொரு செயலிலும் கண்டேன். 1993ம் ஆண்டு, ரிஷிகேசத்திலிருந்து பத்திரிகேதார் யாத்திரை புறப்பட்டு, சுவாமிஜியிடம் விடைபெறப் போனேன்.

கேதார் நாத்தில் இம்முறை குளிர் ஜாஸ்தி, உங்கள் கம்பளித் துணிகள் காணாது இதையும் எடுத்து போங்கள் –என தன்னுடைய சுவற்றர் போர்வை முதலியவற்றை தந்து அனுப்பினார். இச்செயல் நம் ஊர்காரரின் உறவா அல்லது ஞானிகளின் செயலா – அவருக்கு தான் தெரியும்.

சுவாமிஜியை திருகோணமலைக்கு வரவழைப்பதில் முழுமூச்சாக முன்னின்று உழைத்தவர்களில் ஒருவரான செல்வி திலகவதி ஆறுமுகம் அவர்கள், ஒன்றுமே தெரியாமல் ஒரு சிறு கூட்டத்தோடு ரிஷிகேசம் போனபோது, சுவாமிஜி செய்த உதவிகளை வாழ்நாள் முழுதும் மறக்க முடியாதவையெனச் சொல்லிச் சொல்லி மகிழ்வார்கள்.

04.04.98ல் சுவாமிஜி திருக்கோணமலையில் இருந்து புறப்பட்டார் அவரோடு கொழும்பு சென்று வழியனுப்பும் பாக்கியம் கிடைத்தது. திருக் – கோணமலையில் அவரை வழி அனுப்பிவைக்க வந்தவர்களின் கண்கள் கலங்கியிருந் தன. அவர்களிடமிருந்து நிறைய பெற்று கொண்டவர்கள் ஆயிற்றே. கலங்கத்தானே செய்யும்.



நாகரஜா கணபதிப்பிள்ளை.

# இஸ்லாம் - ஒரு பார்வை !

மனிதன் தனது வாழ்வை சரியான முறையில் சீரமைத்துக் கொள்ள அவனுக்கு இரண்டு விஷயங்கள் தேவைப்படுகின்றன.

தனது உலக வாழ்க்கையை நடத்திச் செல்வதற்காக தனிப்பட்ட முறையிலும், சமூக ரீதியிலும் அவனுக்குத் தேவைப்படும் உலகியல் சாதனங்கள்.

தனி வாழ்விலும் சமூக வாழ்விலும் நீதியையும் அமைதியையும் கட்டிக் காத்திடுவதற்கு அவன் மேற்கொள்ள வேண்டிய கொள்கைகள் பற்றிய அறிவு.

மனித வாழ்வுக்கு தேவைப்படும் இந்த இரண்டையும் இதாவது உலகியல் சாதனங்களையும் கொள்கைகள் பற்றிய அறிவையும் மனிதனைப் படைத்த இறைவன் நிறைவாகவே இவனுக்கு அருளியுள்ளான். அவை அனைத்தையும் அவன் முன் பரந்து விரிந்து கிடக்கின்றன. அவற்றை அவன் விரும்பிய வண்ணம் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

மனிதனின் ஆன்மீக, சமூக மற்றும் கலாச்சாரத் துறைகளில் தேவைப்படும் கொள்கைகளை நிறைவு செய்திடுவதற்காக இறைவன்மனித இனத்தில் இருநதே தனது திருத்தூதர்களை எழுப்பினான். இந்தத் திருத்தூதர்கள் வாயிலாக இறைவன் தனது வழிகாட்டுதலை தன் வேத வெளிப்பாடாக அளித்தான்.

அந்த இறை வழிகாட்டுதல் முழுமையான ஒரு வாழ்க்கை திட்டமாகும். அந்த வாழ்க்கைத்திட்டத்தின் பெயர்தான் இஸ்லாம்.

இஸ்லாம் என்பது ஓர் அரபிச் சொல்லாகும். கீழ்ப்படிதல் , சரணடைதல், அடிபணிதல் ஆகிய பொருள்களை அது குறிக்கின்றது. ஒரு நெறி எனும் முறையில் இஸ்லாம், ஒரே இறைவனுக்கு அடிபணிந்து அவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து நடக்கும்படி வலியுறுத்துகின்றது. இறைவனுக்கு முழுமையாக கீழ்ப்படிந்து வாழ்வதே இஸ்லாத்தின் குறிக்கோளாகும். இஸ்லாம் எனும் சொல்லுக்குரிய மற்றொரு அகராதிப் பொருள் அமைதி என்பதாகும். உண்மையான ஒரே இறைவனிடம் சரணடைந்து அவனுக்கு கீழ்ப்படிவதால் மட்டுமே ஒருவன் உடல் மற்றும் ஆன்ம அமைதியை அடைந்து விட முடியும் என்பதை இது அறிவுறுத்துகிறது.

நன்றி:- இஸ்லாத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்

---

இலங்கை விஜயத்தின் இறுதி பேச்சு05.4.98 காலை இராமகிருஷ்ன மிஷன் மண்டபத்தில் ஆன்மீகம் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு நடைபெற்றது. கலந்து கொளளும் வாய்ப்பு கிடைத்தது . இ.கி.மி தலைவர் சுவாமி ஆத்மகானாந்தாஜீ தனது தலைமையுரையில், குழந்தைகளை பார்த்து கேட்டார். நீங்கள் கங்கையை பார்த்திருக்கிறீர்களா? எத்தனை பேர் அங்கு போய் அதில் மூழ்கி எழுந்திருக்கிறீர்கள? எனக்கேட்டுவிட்டு, "இதோ உங்கள் முன்னிலையில் உங்களுக்கு அருளுரை ஆற்ற வந்திருக்கும் சுவாமி நித்தியாநந்தர் அவர்கள் ரிஷிகேசத்தில் நிரந்தரமாகவே கங்கை கரையிலேயே வசிக்கின்றார். அவரைப் பார்த்தால் கங்கையைப் பார்த்த மாதிரி தான் அவரின் அருளுரைகளைக் கேட்டு கங்கையில் மூழ்கிக் கொள்ளுங்கள்,- என்க் கூறி சுவாமிஜியை அருளுரை ஆற்றும்படி வேண்டிக்கொண்டார்.

மறுநாள் 06.04.98 காலை திரு கே.வி சோமசுந்தரம் அவர்கள் வீட்டிலிருந்து, சுவாமிஜியை வழியனுப்ப வந்திருந்த மட்டகளப்பு அன்பர்களோடு தாயகம் போவதற்கு விமான நிலையத்திற்கு புறப்பட்டார். புறப்பட முன்பும் , தன்னிடம் மிஞ்சியிருந்த எல்லாவற்றையும் தேவையுள்ள இடங்களில் கொடுக்கும் படி விட்டுவிட்டே, கொண்டுவந்த சிறிய பையுடனும், பெட்டியுடனும் புறப்பட்டார் பற்றற்ற நித்தியாநந்தர். சுவாமிஜியிடம் விடைபெற்றுக் கொண்டு எப்போ ரிஷிகேசம் போவது என்ற எண்ணத்தோடு நானும் புறப்பட்டேன்.

# ஜாதகத்தில் 7ஆம் அதிபதி

திருமணப் பொருத்தத்தில் 7ம் அதிபதியின் பங்கு மிகவும் முக்கியமானது. வசியம், 7ம் அதிபதியின் பலம், யோக திசைகள், வெள்ளி, செவ்வாயின் நிலைகள் என்பவற்றோடு நட்சத்திர ரீதியான பொருத்தங்கள் பார்த்து திருமணம் நிச்சயிப்பது நன்மையானது.



விக்னேஷ்

திருமணங்கள் எங்கே நிச்சயிக்கப்படுகின்றன என்ற கேள்விக்குப் பதில் சொர்க்கத்தில் என்பது எல்லாரும் அறிந்ததே. இரு உள்ளங்களை இணைத்து இல்லற வாழ்வில் கரம் சேர்த்து விடுவதில் ஜோதிடரின் பங்கு மிக முக்கியமாக உளது.

இல்லற வாழ்வில் இணையப்போகின்ற இருவரது ஜாதகங்களை ஜோதிடரிடம் காட்டி இவர்களது எதிர்கால வாழ்வு எப்படி அமையும் என அறிவதில் பெற்றோர்களுக்கு ஆவலும் ஏக்கமும் அதிகம். பல ஜாதகங்களுக்கு மத்தியில் பொருத்தமான ஜாதகத்தை தெரிவு செய்வது என்பது பெற்றோருக்கு மிகச் சிரமமான தொன்றாகவே இருக்கின்றது. பெற்றோர்கள் தங்களது வாழ்வில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்கள் தங்கள் குழந்தைகளுக்கும் ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தாலும், எதிர்காலம் சுபீட்சமாக அமைய வேண்டும் என்ற காரணத்தினாலும் பொருத்தமான ஜாதகத்தை தேர்ந்தெடுக்க அனுபவமிக்க ஜோதிடரை நாடவேண்டியுள்ளது. ஜோதிடர்களுககு இடையே ஏற்படுகின்ற கருத்து வேறுபாடுகளும், பஞ்சாங்க கணித வேறுபாடுகளும் சில பெற்றோரை முடிவெடுக்க முடியாமல் திணற வைத்தும் விடுகின்றது.

இரண்டு ஜாதகங்களை ஒப்பிட்டு பொருத்தம் பார்க்கையில் முக்கியமாக கவனிக்க வேண்டியவை ஆண், பெண் இருவரது ஜாதகங்களில் காணப்படுகின்ற பொதுவான கிரக அமைப்புகள். இப் பொதுவான கிரக அமைப்புக்களே திருமண வாழ்வில் இவர்களை ஒன்று சேர்த்து பல ஆண்டுகள் இல்லறத்தை இனிதே வாழக் கூடியதாக்குகின்றது.

கன்னி இராசியில் ஜனனமான பெண்ணிற்கு புதன் இராசி அதிபதி ஆகின்றார். இதனால் புதன் கிரகத்தை இலக்கினாதிபதியாகவோ, இராசி அதிபதியாகவோ அமைகின்ற ஆணைத் திருமணம் செய்வதால் வசியம், மணப்பொருத்தம் அமைகின்றது. இதே போல் கன்னி இராசியில் பிறந்த பெண்ணிற்கு 7ம் அதிபதியாக மீன இராசிக்குரிய வியாழன் அமைவதால், மீனத்தை ஜன்ம இராசியாகவோ, இலக்கினமாகவோ உடைய ஆணைத் திருமணம் செய்வதாலும் வசியம் ஏற்படுகின்றது. இப்படியான ஜாதகத்தை தெரிவு செய்வதால் திருமண வாழ்வில் மன ஒற்றுமை நிலைத்திருக்கும்.

ஒற்றுமையான வாழ்வை அமைத்துக் கொண்டாலும், பூரண ஆயுளுடன் இல்லற வாழ்வை அமைத்திட 7ம் அதிபதியின் பலத்தை அறிந்திடல் வேண்டும். பெண்ணின் ஜாதகத்தில் 7ம் அதிபதி கணவனைக் குறிக்கும் கிரகம், இதேபோல் ஆணின் ஜாதகத்தில் 7ம் அதிபதி அவரது மனைவியைக் குறிக்கின்ற கிரகம். எனவே 7ம் அதிபதி பாபக் கிரக சேர்க்கையின்றி இராசிச் சக்கரத்திலும், நவாம்ச சக்கரத்திலும் தனி வீடுகளில் அமைந்திருப்பது நன்மையானது. 7ம் அதிபதி பாபக் கிரக சேர்க்கை அல்லது பார்வை ஏற்படின் ஆயுளிற்குப் பங்கமேற்படுத்தி விடும். இதற்கான விளக்கத்தை கீழேயுள்ள ஜாதகங்களாளல் அறியக் கூடியதாகவுள்ளது.

ஜாதகி 1956ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17ம் திகதி இரவு 12 மணி 44 நிமிடத்தில் பிறந்துள்ளார். இவரது ஜன்ம இலக்கினம் கடகம், ஜன்ம இராசி கும்பம், ஜன்ம நட்சத்திரம் பூரட்டாதி 2ம் பாதம்.

| | | | |
|---|---|---|---|
| 9 | 10 | கேது | 12 |
| சந்திரன் செவ்வாய் | இராசி | | 1 |
| 7 | | | வெள்ளி குரு |
| 6 | சனி ராகு | சூரியன் | புதன் |

| | | | |
|---|---|---|---|
| கேது | புதன் செவ்வாய் | சந்திரன் | 9 |
| 5 | நவாம்சம் | | 10 |
| 4 | | | 11 |
| குரு | 2 | சூரயன லக்னம் | சனி ராகு வெள்ளி |

## ஜனன கால திசை இருப்பு

வியாழன் திசை வரு: 9 மாதம் 4 நாள் 4

கடக இலக்கினத்தில் பிறந்த ஜாதகிக்கு 7ம் அதிபதி சனீஸ்வரன் ஆகின்றார். ஜாதகிக்கு 3ம் திகதி மார்ச் மாதம் 1976ல் திருமணம் நடைபெற்றது. திடீரென்று ஏற்பட்ட மார்பு வலியால் இவரது கணவன் 11ம் திகதி நவம்பர் மாதம் 1979ம் ஆண்டு காலமாகி விட்டார். கணவனின் மரணம் சனி திசை இராகு புத்தியில் நிகழ்ந்தது. சனீஸ்வரன் 7ம் அதிபதி ஜாதகியின் ஜாதகத்தில் 5ம் இடத்தில் இராகு என்ற பாபக் கிரகத்துடன் சேர்ந்து அனுச நட்சத்திரத்தின் 2ம் பாதத்தில் இருப்பதே காரணமாக உளது. நவாம்சத்தில் சனியும், இராகுவும் கன்னி இராசியில் காணக் கூடியதாகவுளது.

## இளவரரசர் சார்ள்ஸின் ஜாதகம்

கீழேயுள்ள ஜாதகம் பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸின் உடையது. இவர் 14ம் திகதி நவம்பர் மாதம் 1948ம் ஆண்டு கடக இலக்கின உதய வேளையில், சந்திரன் அச்சுவினி நடசத்திரத்தின் 3ம் பாதத்தில் இருக்கையில் ஜனனமாகியுள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| 9 | சந்திரன் ராகு | 11 | 12 |
| 8 | இராசி | | லக்னம் |
| 7 | | | சனி |
| வியாழன் | செவ்வாய் | சூரியன் புதன் கேது | வெள்ளி |

| | | | |
|---|---|---|---|
| செவ்வாய் | 7 | 8 | சூரியன் சந்திரன் குரு |
| புதன் | இராசி | | வெள்ளி சனி ராகு |
| கேது | | | 11 |
| 3 | 2 | லக்னம் | 12 |

ஜனன பாவ திசை இருப்பு !

கேது திசை : வரு 3 மாதம் 2 நாள் 4

இளவரசர் கடக இலக்கினத்தில் பிறந்தவர் இலக்கினத்திற்கு 7ம் அதிபதி சனீஸ்வரன் சிங்க இராசியில் மகம் 4ம் பாதத்தில் இருக்கின்றார். இராகு மேட இராசியில் சனியின் திரிகோணத்தில் அச்சுவினி 4ம் பாதத்தில் காணப்படுகின்றார். நவாம்சத்தில் சனி 7ம் அதிபதி இராகுவுடன் கடகத்தில் சேர்க்கை பெறுவதால் இவரது மரனவி இளவரசி டயானா 31ம் திகதி ஆகஸ்ட் 1997ம் ஆண்டு கார் விபத்தில் மரணமானார்.

கடக இலக்கினத்தில் பிறந்த இருவருக்கும் 7ம் அதிபதியான சனீஸ்வரன் நவாம்சத்தில் இராகுவுடன் சேர்ந்தால் அன்பிற்குரிய துணையை திடிரென்று இழக்க வேண்டியதை உதாரண ஜாதகங்களால் அறியக் கூடியதாக உளது.

திருமணப் பொருத்தத்தில் 7ம் அதிபதியின் பங்கு மிகவும் முக்கியமானது. வசியம், 7ம் அதிபதியின் பலம், யோக திசைகள், வெள்ளி, செவ்வாயின் நிலைகள் என்பவற்றோடு நட்சத்திர ரீதியான பொருத்தங்கள் பார்த்து திருமணம் நிச்சயிப்பது நன்மையானது.


*With Best Compliments From;*

ORIENT
TRADING
COMPANY

Agents/ Importers
RED HEART, PILOT,
MAY FLOWER, Brand Cake- Margarines
Pastry-Margarines, Fats for Icing
Biscuit Cream, Biscuit, Ice Cream, Etc....

95, Galle Road, 2nd Floor
Bambalapitiya, Colombo 04,

Tel; 593459, 580547
Fax : (94-1) 580517

# சிவம் கலந்த சிலந்தி

புறாவின் பொருட்டுத் துலை புகுந்து தியாகம் புரிந்த சிபியின் வழி வந்த சோழர்களுக்கு உரிமையாகிய சோழ வள நாட்டிலே, காவிரி நதிக்கரையிலே சந்திர தீர்த்தத்தின் அருகில் ஒரு சோலை உண்டு. அப்பூங்காவில் வெண்ணால் மரத்தின் கீழ் விளங்கும் சிவலிங்கத்தை ஒரு வெள்ளானை தவ உணர்வுடன், தும்பிக்கையில் தண்ணீர் முகந்து ஆட்டி பூங் கொத்துக்களை எடுத்துச் சாத்தி வணங்கி வழிபாடு செய்யும். அதனால் அது திரு ஆனைக்கா'' என்று பேர் பெற்றது.

அங்கு அறிவுடைய ஒரு சிலந்தி, மரத்தின் சருகு இறைவன் மீது உதிராவண்ணம், அன்புடன் தன் வாய் நூலால் பந்தரிட்டது.

இறைவன்மீது இவ்வாறு வாய் நூலால் பந்தரிடுவது அநுசிதம் என்று கருதியானை, அதனை அழித்துவிட்டு வழக்கம்போல் பூசித்துவிட்டுச் சென்றது. சிலந்தி மீளவும் அன்புடன் பந்தரிட்டது. மறுநாள் மறுபடியும் யானை அழித்தது.

இவ்வண்ணம் பலமுறை நிகழ்ந்தது. இது கண்ட சிலந்தி சினமுற்றது. ' இறைவனுடைய திருப்பந்தரை அழித்துச் சிவப்பணிக்கு இடர்புரியும் இந்த யானையைக் கொல்ல வேண்டும்;' என்று கருதியது. நூலால் பந்தரிட்டு அதில் ஒருபுறம் மறைந்தது. பூசிக்க வந்த யானை அதை அழிக்கும் போது, சிலந்தி யானையின் தும்பிக்கைக்குள் நுழைந்து கடித்தது. அதன் விஷ வேகத்தாலும் கடியினால் ஏற்பட்ட வேதனையாலும் துன்புற்ற யானை மண்மிசை வீழ்ந்து புரண்டது. தும்பிக்கையைப் பலமுறை பூமியில் மோதியது. அதனால் தும்பிக்கையுள் சிக்கிய சிலந்தி மாண்டது. சிலந்தி விஷத்தால் யானையும் மாண்டது.

இறைவன் அருட்காட்சி தந்து யானைக்கும் சிலந்திக்கும் திருவருள் புரிந்தார். யானை சிவபாதம் உற்றது. இறைவனுக்குப் பந்தரிடும் பணியில் அதி விருப்புடைய சிலந்தி சோழர் குலத்தில் மன்னவனாகப் பிறந்து மேலும் கோயில் பணி புரியுமாறு இறைவன் திருவருள் புரிந்தார்.

திருக்கயிலையில் சிவகணத்தவருள் மாலியவான் , புட்பதந்தன் என்ற இருவர் தமக்குள் சிவத்தொண்டில் தாம் தாமே சிறந்தவர் என்று கருதி மாறுபட்டனர். ஒருவரையொருவர் அது காரணமாகச் சினந்து, மாலியவான் புட்பதந்தனை யானையாகுமாறு சபித்தான் . புட்பதந்தன் மாலியவானைச் சிலந்தியாகுமாறு சபித்தான். இருவரும் இறைவன் ஆணையின் படி இத் திருத்தலத்திலேயே யானையும் சிலந்தியுமாகப் பிறந்து, சிவபெருமானுடைய திருத்தொண்டிலேயே ஈடுபட்டு, பழம் பிறப்பின் பகை காரணமாக, இப் பிறப்பிலும் மாறுபட்டுப் பகைத்து மாண்டு முடிவில் வீடு பேறு பெற்றனர். முதலில் யானையைக் கொல்ல சிலந்தியே முயன்றதனால், அதற்கு மீண்டும் ஒருபிறப்பு வந்தது. அப்பிறப்பும் மேலானதாக எய்தியது.

வாய் நூலால் பந்தரிட்ட புண்ணியத்துக்கு மன்னனாகப் பிறந்து உலக முழுவதும் புகழும் பெறும் பேறு சிலந்திக்கு உண்டாகியது என்றால், ஆலயப் பணியின் பெரும்பேறு சிலந்திக்கு உண்டாகியது என்றால், ஆலயம் பணியின் பெருமையை இதனால் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

திருமுருக கிருபானந்த வாரியார்
நன்றி சிவனருட்செல்வர்

## ஷீர்டீ பாபா அருளுரைகள்

### யார் இந்த நான்'

நீங்கள் தொலை தூரமோ அல்லது எங்கேயோ என்னைத் தேடிக்கொண்டு போக வேண்டாம்.

உங்களது நாமத்தையும், ரூபத்தையும் நீக்கினால் உங்களுள்ளும் அதைப்போன்றே அனைத்து ஜீவராசிகளுள்ளும் உளதாயிருக்கும் உணர்வு அல்லது நிலைபெற்றிருக்கும் உணர்வுநிலை காணப்பெறுகிறது. அது நானேயாகும்.

இதை உணர்ந்துகொண்டு உங்களிடத்தும், எல்லா ஜீவராசிகளிடத்தும் என்னைக் காணப்பீர்களாக.

இதை நீங்கள் பயிற்சிப்பீர்களானால் சர்வ வியாபகத்தை உணர்ந்து என்னுடன் ஒன்றாகும் நிலையை நீங்கள் பெறுவீர்கள்.

# ஆஞ்ச நேயலு

ஆஞ்சநேய சுவாமிகளின் சிறப்பே தனித்துவமானது. அவர் பக்தர்களுக்கு வழங்கும் அருட்குணங்களை நோக்குமிடத்து அவரிடமுள்ள சிறப்பு என்னவென்பது தெளிவாகும்.

புத்தி பலம் புகழ் உறுதிப்பாடு அஞ்சா நெஞ்சம் உடற்சுகம் விழிப்பு வாக்குவன்மை ஆகிய இத்தனையையும் அவரை நினைக்கும் அடியார்களுக்கு அவர் வழங்குகின்றார். இத்தனை அருட் சிறப்புகளும் சாதாரணமாக ஓர் இடத்திலே வந்து அமைவதில்லை.



பக்தி உள்ளவர்களுக்குக் கூட அப்பக்தி ஞானத்தின் தெளிவு இல்லாமல் மூடப்பக்தியாகவோ, முரட்டுப்பக்தியாகவோ இருப்பதுண்டு. ஞானமும், பக்தியும் வேறுவேறு என்றே அவர்கள் சண்டை போட்டு கொள்வார்கள்.

ஆஞ்ச நேயரோ இராமச்சந்திர மூர்த்தியின் பரமபக்தராக இருக்கும் போதே பரமஞானியாகவும் இருந்தார். தஷ்ணாமூர்த்தி

# மாருதி மாருதி

நல்ல புத்தியுடையவன் தேகசுகமின்றி இளைத்தவனாக இருப்பான். பெரியபலசாலி புத்தியற்றவனாக இருப்பான் புத்தியும் தேகசுகமும் உடையவன் கோழையாக பயந்த சுபாவமுடையவனாக இருப்பான் எத்தனை திறமைகள் இருந்தாலும் அவற்றை பிரயோகிக்கிற சுறுசுறுப்போ விழிப்போ இல்லாமல் சோம்பேறியாக இருப்பான் பெரிய அறிவாளியாக இருந்தாலும் தனக்குத் தெரிந்தவற்றைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லும் வாக்குவன்மை இல்லாமல் இருப்பான். இம்மாதிரி ஏற்றத்தாழ்வான குணங்கள் இல்லாமல் எல்லா உயர் குணங்களையும் ஒரே இடத்திலே பொழிகிறார் ஆஞ்சநேயர்.

இவ்வாறு பொழிவதற்கு காரணம் சாதாரணமாக ஒரே இடத்திலே சேர்ந்திருக்க காணமுடியாத அத்தனை குணங்களும் சக்திகளும் அவர் ஒருவரிடமே பூரணமாக ஒன்று சேர்ந்திருப்பதேயாகும்.

எதிரெதிர் குணங்கள் எனக்கருதப்படுவன கூட அவரிடத்தே ஒன்று சேர்ந்து அமைதி பெறுகின்றன. உதாரணமாக பலசாலியிடம் பணிவு இருக்காது. பெரிய புத்திசாலி அகங்காரமில்லாத பக்தி பணிவு ஆகியவற்றிலும் முதன்மையாகி நிற்கின்றார்.

மகாசக்திமானாக இருந்தும் அத்தனை சக்தியும் ராமன் போட்ட பிச்சை என்ற அடக்கத்தோடு தனக்கு ஒரு பதவியும் கேளாமல் இராம தாசனாகவே இருந்தார். அப்படி அடிமையாக இருந்ததாலேயே அவர் நிறைந்து இருந்தார்.

எப்படி ஸநகாதி முனிவர்களை முன்னிட்டு உபதேசம் செய்கிறாரோ அப்படியே ஸ்ரீராமனும் ஆஞ்சநேய சுவாமியை முன்னால் வைத்துக்கொண்டே ஞானஉபதேசம் செய்கிறார் என்று வைதேக சகிதம் என்னும் சுலோகம் கூறுகின்றது.

அருச்சுனனுடைய தேர்க்கொடியிலேயே இருந்து கொண்டு கீதோபதேசத்தை நேரிலேயே கேட்டவர் அவர் பைசாச மொழியிலேயே கீதைக்கு தத்துவமயமான ஒரு விளக்கவுரை இருப்பதாகவும் அது ஆஞ்சநேயராலே இயற்றப்பட்ட தென்றும் கூறுவார்கள்.

ஒன்பது இலக்கணங்களும் (வியாகரணம்) தெரிந்த "நவவ்யாகரண வேத்தா" என்று இராமரே புகழ்கின்ற அளவுக்கு அவர் ஒரு பெரிய கல்விமான்

எனினும் அவர் தன்னுடைய புத்தி ஒளியினையும் சக்தி வேகத்தினையும் அடக்கிக்கொண்டு, பக்தியிலேயே பரமானந்தம் அநுபவித்தார்.

பக்தி என்பதால் உலக காரியங்களைக் கவனியாது விட்டார் என்று கூறமுடியாது மாகா பௌருஷத்தோடு போராடி அபலைகளைக் காப்பாற்றியவர்களில் அவருக்கு எவருமே இணை இல்லை உலகசேவைக்கு அவரே உதாரணம் ஞானத்தில் உச்சநிலை வீரத்தில் உச்சநிலை கீர்த்தியில் உச்சநிலை சேவையில் உச்சநிலை பணியில் உச்சநிலை இப்படி எல்லாம் ஒன்று சேர்ந்திருக்கின்ற சுயவடிவம் ஒன்று உண்டு என்றால் அது ஆஞ்சநேயசுவாமிதான்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அவருடைய பிரமச்சரியம் பற்றிக் கூறவேண்டும் ஒரு கணமேனும் காமம் என்கிற நினைப்பே வராத மகா பரிசுத்த மூர்த்தி தனக்கென்று எதுவுமே நினைக்காதவர். ஒரு காமனையும் இல்லாமல் இராமனுக்குச் சேவை செய்தே நிறைந்து விட்டார்.

அவரை நம்முடைய நாட்டில் பொதுவாக "அநுமார்" என்போம். கன்னட தேசத்தில் அவர் "கநுமத்தயா " எனப்படுபவர். சித்தூருக்க வடக்கே ஆந்திரா முழுவதும், "ஆஞ்சநேயலு" என்பார்கள். மகா ராஷ்டிரம் முழுக்க "மாருதி மாருதி" என்று கொண்டாடுவார்கள், அதற்கும் வடக்குப் பக்கத்தில் வாழ்பவர்கள் "மகாவீர்" என்றே சொல்லுவார்கள்.

"ராம் ராம்" எங்கெங்கே உச்சரித்துக் கொண்டிருந்தாலும்



இரகுநாத கீர்த்தனம் எங்கே நடந்தாலும் அங்கெல்லாம் நம் கண்ணுக்குத் தெரியாமல் ஆஞ்சநேயர் தாரை தாரையாக ஆனந்தக் கண்ணீர் சொரிய நின்று கேட்டுக் கொண்டிருப்பார்.

இக்காலத்தில் எமக்கு ஏனைய அருட் குணங்களுடன் அடக்கமாய் இருக்கின்ற பண்பு மிக்க அவசியமாகத் தேவைப்படுகின்றது. எத்தனை வந்தாலும் இவை போதாதா என்று உயர உயரத் துள்ளிக் கொண்டேயிருக்கிறோம். இதனால் நாம் புது ப்புது அதிருப்திகளையும் குறைகளையுந் தான் உண்டாக்கிக் கொள்கிறோம் துள்ளாமல் அடங்கிக் கிடந்தால் தான் இறைவனுடைய திருவருள் கிடைக்கும் நிறைந்த நிறைவு அதை நமக்கு ஆஞ்சநேயர் திருவருள் பாலிக்க வேண்டும்.

ஆயர்பாடி ஆழ்வார்
ஸ்ரீ.வே.த.மயில்வாகனம் சுவாமிகள்




திருகோணமலை "கலைமகள் மொன்டிசூரி" பாடசாலை வருடாந்தக் கலை நிகழ்ச்சியின் போது இடம்பெற்ற "ராதா கிருஷ்ண" நடனம்.



பாதார விந்தம் பணிவார் தமக்கு நின் பாதமலர்
ஆதாரம் நீயன்றி வேறுளதோ அலைவார் கடலில்
போதா ரெழுநரைப் பிறவித் துயரைப் போக்கின்ற
வேதா ரணியனே.விறல் வீரகத்தி விநாயகனே.

வேறு

பூதமும் கரணமும் பொறிகள் ஐம்புலனும்
பொருந்திய குணங்கள் மூன்றும்
நாதமும் கடந்த வெளியிலே நீயும்
நானுமாய் நிற்கும்நாள் எந்நாளோ
வேதமும் சமயமும் வேதமனோகர
இன்ப சாகரனே
ஏதுமொன் றறியேன் யாதுமுன் செயலே
ஏக நாயகனே.

வேறு

ஊரிலே உறவில்லை உதவிகள் செய்து
அஞ்சல் என்பார் ஒருவர் இல்லை
நீரிலே நின்று அலையும் துரும்புபோல்
நெஞ்சம் வைத்துத் தியங்குகின் றேனே
சீருலாவு திருநெல் வேலி நாதனே.

(இப்பாடல்கள் கர்ண பரம்பரையாக இக்கோவிலில் பாடப்பட்டு வருகின்றன.)

14 - 02 - 1999

# கைலாச வாகனம்

வேலன்டுவார் வேண்டுவதை ஈன்றருளும் வேதாரண்ய வீரகத்தி விநாயகர் யாழ்ப்பாணத்து திருநெல்வேலிப் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார்

மாசிமாதத்து அமாவாசைத் திகதியில் தீர்த்தோற்சவம் நடைபெறக் கூடியதாக பதினாறு தினங்கள் நடைபெறும் வருடாந்த மகோற்சவம் சென்ற 31.01.1999 முதல் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தான் பவனி வருவதற்கு ஒரு கைலாய வாகனம்தேவையென விநாயகர் எண்ணினார் போலும், அதற்கமைய புதிய சித்திர வேலைப்பாடுடன் கூடிய கைலாயவாகனம் உருவாக்கப்பட்டுள்ளது. கைலாய வாகனம் நல்லூர்க் கந்த சுவாமி கோயிலிலும், மற்றும் ஒரு சில கோயில்களில் மட்டும் உள்ளது. தம்பி கந்தன் கைலாய வாகனத்தில் வலம் வரும் பொழுது அண்ணன் கணபதி சும்மா இருப்பாரா? தனக்கும் ஒரு கைலாய வாகனத்தை தன் அடியார்களைக் கொண்டு உருவாக்கி விட்டார்.

இக்கோயிலில் 12ஆம் திருவிழாவாக கைலாய வாகனம் அமைவது அடியார்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். கைலாய மலையிலே இறைவன் அம்மை அப்பனாக பூத கணங்களுடனும், நந்திதேவர் நாரதர் ரிஷிகள் புடை சூழ அமர்ந்திருக்கும் கண் கொள்ளாக்காட்சியை மானிடராகிய நாம் காண்பதென்பது முடியாத செயலாகும்.

ஒரு முறை திருநாவுக்கரசு நாயனார், கைலாய மலையிலே இறைவனைக் காணவிரும்பி வெயிலிலும் மழையிலும், கல்லிலும், உருண்டும் சென்று இயலாது போகவே அவருடைய பக்தியைப் பாராட்டி, இடை வழியில் அருள் புரிந்தார். இலங்கை வேந்தன் இராவணன் ஒரு சமயம் தனது புஸ்பக விமானத்தில் பயணம் செய்யும் பொழுது பயணத்திற்கு இடையூறாக விருந்த கைலாய மலையை, தனது வலிமை பொருந்திய தோல்களினாலே தூக்கி வீச முற்பட்டான். சாமகானப் பிரியனாகிய சிவபெருமான்,

இராவணனுடைய கர்வத்தை அடக்க எண்ணினனாய், தன் கால் பெருவிரலால் மலையை அழுத்தி, அவனை நசுங்கச் செய்தார். அதேவேளை, அங்கு தோன்றிய வாகீச முனிவரின் ஆணைப்படி சாமகானம் பாடவிளைந்த பொழுது வீணை இல்லாது போகவே உடனே தன் ஒரு தலையையும் ஒரு கையையும் ஒடித்து இரண்டையும் இணைத்து வீணையாக்கி, நரம்புகளை நாதத் தந்திகளாக்கி சாமகானம் பாடி, இறைவனை இசையிலே மெய்மறக்கச் செய்து கைலாய மலை என அறியாது தான் செய்த தவறை மன்னிக்கக் கோரி இறைவனின் கைலாயக் காட்சியைக் கண்டு அருள் பெற்றான்.

புராண வரலாறு கொண்டதும், புண்ணிய காட்சியுமான கைலாயக் காட்சியை நம் கண்முன்னே கைலாய வாகனமாக உருவாக்கியவர்கள் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய ஸ்தபதி சிற்பகலா விற்பன்னர் விஸ்வ பிரம்மஸ்ரீ ஆ. ஜீவரத்தினமும் அவரது சக சிற்பாசாரியர்களும் ஆவர். குறுகிய காலத்தில், மிகவும் அழகாக சிற்பக்கலை நுணுக்கங்களுடன் இதனை உருவாக்கியது பாராட்டுக்குரியது.

சிவஸ்ரீ
வை. ஜெகதீஸ்வரக்குருக்கள்


*காண்டம்*

*முனிவர்களால் எழுதப் பெற்ற காண்டம் என்னும்*

*நாடி வாக்கியத்தில்*

*உங்கள் பலா பலன்களை அறிந்து வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள்.*

*ரிஷி. எஸ். மணி*

*144 2/1, காலி வீதி*
*வெள்ளவத்தை*
*கொழும்பு.06*
*தொலைபேசி இல.586218*

# மரண பயம் மாய்ப்பான்

தருமம் மறுபடியும் வெல்லும் வெல்விப்பவன் இறைவீன் இதில் ஐயம் வேண்டாம். உலகினர்க்கு இன்று வேண்டுவது பக்தி. பேரறிவும் ஆனந்தமும் நோய்ப்பிணியும், பொருள் வருவாய் வளமும் எவருக்கும் என்றும் திருப்தி தராதவை இவை ஒன்று மாறிப் பிறிதொன்று உளத்திலும், உடலிலும், உணர்விலும் பற்றி நின்று பாதகஞ் செய்வன.

இயலாமை உண்டாகும் போது – கவலை ஏற்படும் போது நிவிர்த்தி செய்யும் கொழு கொம்பாகத் திருவருள் – இறைவன் கருணை – தானே வந்து தலையளித்தாட் கொள்ளும். இவ்வாறு முன்னின்று காக்கும் கருணாமூர்த்தி உலகிலே யார் என்ற வினாவினைக் கிளர்த்தினால், அதன் பதில் பிள்ளையார் என்றமையும் இவ்விடை மிகமிகச் சரியானது. விக்கினங்கள் அனைத்தையும் களைபவர் விக்ன விநாயகர். சித்தியெல்லாம் தருபவர் சித்திவிநாயகர்.

இவ்வருளை எல்லாம் பரப்பி நிற்பது சந்நிதி எனுமிவ் ஆன்மீக சஞ்சிகை . இறையருளையும், சஞ்சிகைப் பயனையும் வாழ்த்துவோமாக. யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலிக் கிராமத்திலே பழங்கிணற்றடியில் கோயில் கொண்டுறையும் வீரகத்தி விநாயகர் பெருமான் வெகு கீர்த்தி மிக்கவர். மூர்த்தி விசேடமிக்கவர். அன்பர்களது உள்ளத்தில் மருவி வேண்டுவன நல்கும் பேருளாளர். அந்தத் தும்பி முகத்து ஐங்கரனை சிந்தையிலே நினைத்தாலே நமது பழவினைகள் அனைத்தும் பாறும். மூர்த்திகரமிக்க பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் பெருமான் இன்று தேரிவர்ந்தூறும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

வேதவொலி, கீதவொலி, நாதவொலி, மணியொலி, அரோகரா பக்திஒலி என்பன கலந்தொலித்துக் கண்ணுக்கும் கருத்துக்கும் பேரின்ப உணர்வை நல்கும்.

இந்நன்னாளை இனியமுறையிலே பதிவாகத் தரும் சந்நிதி சஞ்சிகையின் பணிகள் மேலும் விசாலித்துத் துலங்க வேண்டும் என்று வாழ்த்துவதிலே மனநிறைவடைகிறேன்

பாரதப் பெரும் போர்
மருப் பொன்றொடித் தொரு
கரத்தில் தரித்துயர் திரிப்புறத் தெழுதும்
கவளமா களிற்றின் திருமுகம் படைத்த கடவுள்
(திருவாதவூர்ப்புராணம்)

என்று விநாயகப் பெருமான் சிறப்பிக்கப்பட்டுள்ளார். சிவபெருமானின் தேர்அச்சினைப் பொடி செய்து ஒடித்துத் தமது பிரபாவத்தையும், பரத்துவத்தையும் உலகுக்குணர்த்தியவர். ஆன்மா ஈடேற்ற நோக்காக இன்று அழகிய தேரேறி அழித்தற்றொழிலை நிகழ்த்துகின்றார்.

# தும்பி முகத்து ஐங்கரன்

நாம் எண்ணினாலென்ன எண்ணா விட்டாலென்ன இறைவன் தாம் படைத்த உயிர்களுக்காக இரங்கிப் புண்ணியம் நல்குவதற்கென – அருள் வெளிப் பட ஏற்படுத்தப் படுபவையே மகோற்சவங்கள்.

பரங்கருணைத் தடங் கடலாகிய விக்னேஸ்வரப் பெருமானின் இரதோற்சவம் நம்மை – நம்மன அழுக்குகளை நீக்கித் தூய்மை செய்வதாகுக, வஞ்சக எண்ணங்கள் களைந்து சிவபோதம் உண்டாக்குவதாகுக. பருவமாய் நமதுள்ளம் பழுக்கச் செய்வதாகுக.

பெருமை மிகு சந்நிதி சமய சஞ்சிகை மகா சிவராத்திரி தினத்தன்று, திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் தேர்த்திருவிழாச் சிறப்பு மலராக வெளிவருவது பெரும் பாராட்டிற்குரிய திருத் தொண்டாகும்.

இப்பணியில் ஈடுபட்டோர் நீடு சுகானந்த வாழ்வும், நற்பேறுகளும் பெற நயினை ஸ்ரீ நாக பூஷணி அம்பாளின் திருவடிகளை இறைஞ்சி வழுத்திப் பிரார்த்தித்து நிற்கிறேன்.



வாகீச கலாநிதி
கனகசபாபதி – நாகேஸ்வரன்
முதுநிலை விரிவுரையாளர்
சப்பிரகமுவ பல்கலைக்கழகம்



நாடும் மக்களும்
நலம் பெற
சித்திரத் தேரில் பவனி வரும்
ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானை
வேண்டுவோமாக.

திருமதி.ப.இரத்தினம்,
களுபோவில

பிள்ளைகள்
பிரான்ஸ்

சந்நிதிக்கு
எமது இதயங்கனிந்த
வாழ்த்துக்கள்

**********

ராசி சில்க்ஸ்
237, மெயின் வீதி
கொழும்பு – 11
தொலைபேசி இல : 449944

கிளை :
ராசிசில்க்ஸ்
யாழ்ப்பாணம்

நல்லி சில்க்ஸ்
யாழ்ப்பாணம்

# திருநெல்வேலி பழங்கிணற்றடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வரலாறு

சைவமும் தமிழும் வளர்த்த சான்றோர்கள் பலர் வாழ்ந்த புண்ணிய பூமியாகத் திகழ்வது திருநெல் வேலி கிராமமாகும். பசுவதைக்கு அஞ்சிப் பரதேசம் போனவர் என்று போற்றப்படும் ஞானப்பிரகாச சுவாமிகள் பண்டிதமணி சி. கணபதிபிள்ளை ஆகியோரால் பெருமையுற்றதும் பழமைவாய்ந்த ஆலயங்கள் சிறந்துவிளங்குவதும் சிவநெறிச்செல்வர்களும் அறநெறிச்செல்வர்களும் கல்விமான்களும்;' வணிகப் பெருமக்களும் கொடைவள்ளல்களும் நிறைந்து விளங்கும் பேறு பெற்றது.


இக்கிராமம் சங்கீதம் நாட்டியம், சிற்பம், ஓவியம் ஆகிய நுண்கலைகளின் இருப்பிடமாக தொன்றுதொட்டு விளங்குகிறது. செழுமையான மண்வளம் மிகுந்து காணப்படும் இக்கிராமத்தில் வாழை, மா, பலா முதலிய கனிதரும் மரங்களும் மற்றும் பூஞ்சோலைகளும் காய்கறித் தோட்டங்களும் நிறைந்து இயற்கை அன்னையை அழகு படுத்துகின்றன. இங்கு வாழ்கின்ற மக்கள் சைவப் பண்பாட்டில் ஊறித் திளைத்தவர்கள் ஆசார சீலம் நிரம்பப் பெற்றவர்கள் . கல்வி அறிவால் சிறந்து விளங்குபவர்கள் .


இக்கிராமத்து மக்கள் வாழ்வின் உயிர் நாடியாக, உள்ளுணர்வாக சமய நெறி விளங்கி வந்துள்ளது. அவர்களின் ஆன்மீக வாழ்வுக்கு மட்டுமன்றிப் பல்வேறு வகைப்பட்ட கலை வளர்ச்சிக்கும் ஆலயங்களே நிலைக்களனாக சிறந்து விளங்கின. அத்தகைய ஆலயங்களுள் திருநெல்வேலி பழங் கிணற்றடி. ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் சிறப்பு பெற்று விளங்குகின்றது. அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் விநாயகப் பெருமானை மூல மூர்த்தியாக கொண்டு கிழக்குப் பக்கம் நோக்கிய சந்நிதியுடன் சீர் பெற்று விளங்குகின்றது. சிறிய கோயிலாக இருந்த போதிலும் அங்கே எழுந்தருளியிருக்கும் பெருமான் மூர்த்திகரமாக விளங்குகிறார். பிரணவ சொரூபியான விநாயகப் பெருமானின் அருள் வடிவங்கள் நமது ஆலயங்களில் நின்ற கோலத்திலும், இருந்த கோலத்திலும், நடனத் திருக்கோலத்திலும் உள்ளன.

இவ்வாலயத்தின் மூலஸ்தானத்திலே ஏத்துவார் இடர் களையும் எம்பெருமான் இருந்த கோலத்திலே காட்சி தருகிறார். ஒற்றைக் கொம்பும், இருசெவிகளும், மூன்று திருக்கண்களும், நான்கு திருத்தோள்களும், ஐந்து திருக்கரங்களும், பருத்த உடம்பும் உடையவராக ஸ்ரீவீரகத்தி விநாயகன் என்னும் திருநாமம் தாங்கி தன்னை நாடிவரும் அடியார்களுக்கு அருள் பாலித்த வண்ணம் வீற்றிருக்கிறார். அவருடைய முகம் பிரணவத்தையும், மூன்று திருக்கண்கள் முச்சுடரையும் உணர்த்துகின்றன. அவருடைய துதிக்கை நாதவிந்து வடிவமாக அமைந்திருக்கிறது. அவரது திருமேனி ஞான மயமானது. திருப் பாதங்கள் ஞானசக்தியும் கிரியா சக்தியுமாகும் . விநாயகப் பெருமான் தமது திருக்கரங்களில் பாசம், அங்குசம், மோதகம், கும்பம் என்பவற்றைத் தாங்கியுள்ளார்.

பொதுவாக ஆலயங்கள் அமைக்கப் - பட்டிருக்கும் தன்மையைக் கூர்ந்து கவனிக்குமிடத்து ஓர் உண்மை புலப்படுகிறது . நமது உடம்பின் அமைப்பைப் போன்றே இருக்கிறது. மனிதன் ஒருவன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் நிலையே ஆலய அமைப்பென்று ஆன்றோர் கூறுவர். இதனைத் திருமூலர் தமது திருமந்திரத்தில் பின்வரும் பாடலில் அழகாக எடுத்துக்காட்டுகிறார்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே "





சிவநெறிச் செம்மல்
வை . அநவரத விநாயகமூர்த்தி

இவ்வாலயத்தின் அமைப்பை உற்று நோக்குமிடத்து அதில் பல உறுப்புக்களைக் காணக் கூடியதாக இருக்கின்றது . மூலவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் இடம் விமானம் என்றும் அதன் மேற்கூரை ஸ்தூபி என்றும் வழங்கப்படும். ஸ்தூபியின் கீழ்க் காணப்படும் கருவறையைக் கர்ப்பக்கிருகம் என்றும் கூறுவதுண்டு . இந்தக் கர்ப்பக் கிருகத்தை அடுத்து அர்த்த மண்டபமும் மகா மண்டபமும் மற்றும் வசந்த மண்டபம் யாவும் ஒருங்கே அமையப் பெற்று அழகுறக் காட்சி தருகின்றது. மணிக் கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் வைரவப் பெருமானுக்கு தனியாக சிறு கோயில் அமைக்கப்பட்டுள்ளது. பதி பசு பாசம் ஆகியவற்றை விளக்கும் கொடிமரம் . மூஷிகம் பலிபீடம் என்பவை ஆகம முறைப்படி அமைக்கப்பட்டுள்ளன . வசந்த மண்டபம் புதுமிக்கப்பட்டு அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் காட்சி அளிக்கிறது. யாக சாலை' பாக சாலை ' வாகன சாலை 'களஞ்சிய அறை யாவும் அமையப் பெற்று ஆலயம் சிறந்து விளங்குகின்றது. தேவசபை தெற்கு நோக்கியபடி காட்சி தருகிறது.

உற்சவ மூர்த்திகளான வீரகத்தி' விநாயகர் பஞ்சமுக விநாயகர் வலம்புரி விநாயகர் ஆகிய எழுந்தருளி மூர்த்தங்கள் இந்தத் தேவசபையில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றனர். இந்த ஆலயம் உள்வீதி வெளிவீதி என இரண்டு சுற்றுப் பிரகாரங்களைக் கொண்டது. வீதிகள் யாவும் தூய்மையாக விளங்குகின்றன. யாக சாலையின் வெளிப்புற சுவற்றில் வரையப்பட்டிருக்கும் நர்த்தன கணபதி ஓவியமும் மகா மண்டபத்தில் காட்சி தரும் விநாயகப் பெருமானின் ஓவியமும் கண்களுக்குப் பெரும் விருந்தாகின்றன. ஆலயத்தின் சுற்றாடல்கள் யாவும் தூய்மையாக விளங்குகின்றன. அமைதியும் ஆனந்தமும் தவழ்ந்து வந்து ஆலயத்திற்கு செல்லும் அடியார்களுக்கு மன நிறைவையும் மகிழ்ச்சியையும் தருகின்றன.

ஆதியில் வேதாரணியத்தில் இருந்து வைத்திலிங்கம் கார்த்திகேசு என்னும் சைவப்பெரியாரே ஒரு சிறிய விநாயகர் விக்கிரகம் கொண்டு வந்து திருநெல்வேலி பழங்கிணற்றடிக்கு அருகாமையில் ஒரு கொட்டில் அமைத்து அங்கு பிரதிஷ்டை செய்து தினமும் ஏழு திரிவைத்து ப் பூசை செய்து வந்தாரென்றும் பின்னர்




1890 ஆம் ஆண்டு தொடக்கம் அவரின் மகன் கா. நல்லதம்பி என்பவரால் பூசை செய்யப்பட்டு வந்ததாகவும் அறியக் கூடியதாக இருக்கிறது .

இவருடைய காலத்திலேயே தான் (1909ஆம் ஆண்டில் ) ஓலைக் கொட்டில் எதிர்பாராத விதமாக தீப் பிடிக்கவே அடியார் ஒருவரது கனவிலே அக்கொட்டில் எரிவதைப் பிள்ளையார் தெரியப்படுத்தினாரென்றும் பொதுமக்களின் உதவியுடன் அந்த அன்பர் தீயை அணைத்தார் என்றும் கூறுவர் . பின்னர் அந்தக் கொட்டில் திருத்தியமைக்கப் பட்டு ஓடு போடப்பட்டது.1933 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் நவராத்திரி பூசை நாலாம் நாள் நல்ல தம்பி காலமானார். அதன் பின்னர் கார்த்திகேசு சின்னத்தம்பி பூசை செய்தார். பின்னர் சின்ன த்தம்பி நோய்வாய்ப் பட அவரின் மைத்துனரான காசிப்பிள்ளை குமார சுவாமி பூசை செய்து வந்தார். இவ்வாலயத்தின் ஆரம்பகால வரலாற்றை ஆராயும் போது , சைவ ஆசாரங்களை அனுஷ்டித்து வந்த பரம்பரையினரே நித்திய பூசைகளை பொறுப்பேற்று சிறப்பாக நடத்தி வந்துள்ளனர் எனக்கருத இடமுண்டு. 1966ஆம் ஆண்டு வரை இந்த நிலை நீடித்து வந்துள்ளது.

வெவ்வினையை வேரறுக்கவல்ல விநாயகப் பெருமான் திருவருள் துணைபுரிய கனவில் கண்ட காட்சிப்பிரகாரம் இவ்வாலயத்துக்கென உற்சவ மூர்த்தி ஒன்று உருவாக்கப்பட்டு 1965ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் இக்கட்டுரையாளரினால் அன்பளிப்பு

செய்யப்பட்டது. திரு நெல்வேலி , பெரிய நயினார் குடும்பத்தினர் பழமை வாய்ந்த மடாலயமாக இருந்து வந்தது ஆலயத்தைப் புதுப்பித்து ஒரு சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகத்தை நடத்துவதற்காக அயராது உழைத்து வந்தார். இதன் பயனாக மூலவர் விக்கிரகம் ஒன்று புதிதாக வடிவமைக்கப்பட்டு



வவுனியாவில் இருந்து நல்லதம்பியின் உதவியுடன் சின்னதம்பி நடராஜா என்பவரால் கொண்டுவரப்பட்டு 1966ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8ம் திகதியன்று சுபவேளையில் இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுக் கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றது. இதன் பின்னர் பூசைகள் யாவும் சிவஸ்ரீ வைரவநாதக் குருக்களிடமே கொடுக்கப்பட்டன. அவர் சிறிது காலம் பூசைகளுக்குப் பொறுப்பாகவிருந்தார். அவர் காலமாகிவிடவே அவரது மகன் சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் பூசைகளைப் பொறுப் பேற்று சிறப்பாக நடத்தி வருகிறார்.

1981 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 1982.1983 ஆம் ஆண்டுகளிலும் மாசிமாதத்தில் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்தது. பின்னர் திருப்பணி வேலைகளுக்காக துந்துபி வருஷம் வைகாசி (01.06.1982) செவ்வாய்க்கிழமை பூர்வபக்க தசமித் திதியில் பாலஸ்தானம் நடைபெற்றது அதனால் 1984ஆம் ஆண்டில் அலங்கார உற்சவம் நடைபெறவில்லை. விநாயகப் பெருமானின் 18ஆம் திகதி இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது.. 1985ஆண்டில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்த மகோற்சவம் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் நடைபெற்று வருகிறது. முதல் மூன்று வருடங்கள் அலங்கார உற்சவமும் பின்னர் 1985 ஆம் ஆண்டில் கொடியேறி மகோற்சவமும் நடைபெறக் காலாயிருந்தவர் திரு. நாகரத்தினம் அவர்களே. மேலும், இதே ஆண்டில் பூதவாகனமும் கஜமுக வாகனமும் செய்வித்து கஜமுக சூர சங்கார விழாவையும் ஆரம்பித்து வைத்த பெருமை இவரையே சாரும். இப்பெரியார், இக் கோயிலில் சம்பளம் பெறாத ஒரு தொண்டராக நீண்டகாலம் பணிபுரிந்து வந்தமை குறிப்பிடத் தக்கது. இவரது அரும் பெரும் முயற்சி 1986ஆம் ஆண்டில் வீரகத்தி விநாயகருக்கு ஓர் அழகிய சித்திரத் தேர் உருவாவதற்குப் பேருதவியாக இருந்தது.

திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய நிர்வாக இயக்குனர் திரு. ஆ. ஜீவரத்தினம் சிற்பாசாரியாரின் கைவண்ணத்தில் இச்சித்திர தேர் உருவானமை குறிப்பிடத்தக்கது. தேர் முட்டி அமைப்பதற்கு 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18.ஆம் திகதி திரு. கா.சி. நடராசா அவர்களால் அத்திவாரம் போடப்பட்டு மிகவும் குறுகிய காலத்தில் இத்திருப்பணி வேலைகள் நிறைவுபெற்றன. திரு. சிவலிங்கம் தனது காணியில் ஒரு பகுதியை தேர்முட்டி அமைப்பதற்கென குறைந்த விலையில் ஒதுக்கி கொடுத்தார் மேலும் இளைப்பாறிய ஓவசீயர் திரு.இ. குமாரசுவாமி அவர்கள் இக்கோயில் வளர்ச்சிக்கு ஆற்றிய சேவை மகத்தானது. அத்துடன் இச்சித்திரத் தேர் உருவாவதற்கு . நீண்ட காலம் இவ்வாலயத்தில் ஒரு தொண்டராகப் பணிபுரிந்து வந்து அமரத்துவம் அடைந்த நாக ரத்தினம் அவர்களது அரும் பெரும் முயற்சியே உறுதுணையாக இருந்ததை என்றும் நினைவு கூர வேண்டும். இன்னும் ஒரு முக்கிய விஷயத்தை இங்கு குறிப்பிடவேண்டும். இவ்வாலயத்தில் இளைஞர்கள் தாமாகவே முன்வந்து இறைபணியில் ஈடுபடுவதைத் தினமும் காணக்கூடியதாக இருக்கிறது. அவர்களது சேவையை மனமார வாழ்த்துகிறோம்.

நாட்டில் தற்போது நிலவும் கஷ்டமான சூழ்நிலையிலும் அன்பர் ஒருவரின் வேண்டுகோளை ஏற்று இவ்வாலயத்தின் வடக்கு வீதியில் அன்னதான மண்டபம் ஒன்று மிகவும் குறுகிய காலத்தில் அமைக்கப்பெற்று தைப் பூச நன்னாளில் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க திருப்பணியாகும்.

1994 ஆம் ஆண்டில் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு திரு மஞ்சம் ஒன்று நிர்மானிக்கப்பட்டு 04.03.1994 அன்று நண்பகல் 12 மணியவில்

வெள்ளோட்டம் விடப்பட்டது. திருநெல் வேலியைச் சேர்ந்த சிற்பச் சக்கரவர்த்தி திரு. ஆ. ஜீவரத்தினம் ஆச்சாரியார் அவர்களின் தலைமையின் கீழ் ஆறுமுக சிற்பாலயத்தினர் கலைவண்ணம் மிக்க இச்சித்திர மஞ்சத்தை அழகுற நிர்மாணித்துளனர்.

ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானது அடியார்களின் பேருதவியினால் சித்திரவேலைப் பாடுகளுடன் கைலாசவாகனம் ஒன்றும் உருவாக்கப்பட்டு4.03.97 அன்று வெள்ளோட்டம் விடப்பட்டது. இவ்வாலயத்துக்கென சித்திரத் தேர், சப்பரம், மஞ்சம், மற்றும் வாகனங்கள் அனைத்தையும் நிர்மாணித்த ஆறுமுகம் சிற்பாலய அதிபர் திரு. ஜீவரத்தினம் அவர்களின் நெறிப்படுத்தலில் சிற்பாலயக் கலைஞர்களால் இந்தக் கைலாச வாகனமும் உருவாக்கப்பட்டது .

மகோற்சவ காலத்தில் பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகனைத் தரிசிக்கவரும் அடியார்களின்தாகத்தினை தீர்க்கும் பொருட்டு திருநெல்வேலி கலாமன்றத்தினர் ஆலயத்தின் தேரோடும் வீதியின் ஒரு புறத்தில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து குளிர்பான வகைகளை அடியார்களுக்கு அன்புடன் அளித்து அரும் பெரும் தொண்டாற்றி வருவதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. கலாமன்ற உறுப்பினர்கள் ஆற்றிவரும் இந்தப் பணி பாராட்டுக்குரியது.

கலாமன்றத்தினர் இன்னுமொரு அரும்பெரும் பணியில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. மகோற்சவ தினத்தையொட்டி மாணவர்களிடையே சைவ சமய அறிவை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஆண்டு தோறும் சமய பாடப் பரீட்சை, கீழ்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தி பரீட்சையில் சிறந்தபெறுபேறு பெறுபவர்களுக்கு பரிசில்கள் பூங்காவனத் திருவிழாவன்று வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

> சித்திரத் தேரில் பவனி வரும்
> ஸ்ரீ வீரகத்தி விநாயகன்
> திருவருள்
> 'சந்நிதி' வாசகர்களுக்கு
> கிடைப்பதாகுக.
> விநாயகன் அடியார்

நித்திய பூசையும் நைமித்திக பூசையும் முறையாகவும் காலம் தவறாமலும் நடைபெற்று வருகின்ற ஆலயங்களில் இறைவனின் திருவருள் நிறைந்து விளங்கும். அதற்கு அமைய இக்கோயில் தற்போது காலை, உச்சிக்காலம், மாலை ஆகிய மூன்று நேரப் பூசைகளும் குறிபிட்ட நேரத்தில் நடைபெற்று வருகின்றன. நாளாந்தம் இவ்வாறு பூசைகள் ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருவதால் ஆலயத்தில் ஒரு தெய்வீக ஒளி வீசுவதைக் காணலாம். இங்கு நடைபெறும் பூசை முறைகள் வழிபடுவோரைத் தெய்வ பக்தியில் ஈடுபடுத்தும்.

நமது ஆலயங்களில் திருவிழாக்கள் முறையாக நடைபெறுமிடத்து அவை சீரும் சிறப்பும் பெற்று விளங்குவதைச் காணலாம். இத்தகைய ஆலயங்களினால் அவை அமைந்துள்ள கிராமங்களும் சிறப்படைகின்றன. திருவிழாக்கள் தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் நன்மையளிப்பவை. அதனால் சமூகத்தினர் பலரும் நன்மைபெறுவதுடன் இறையுணர்வும் ஏற்படுகின்றது. இறைவனைப்பற்றி அதிகமாகச் சிந்திக்கவும் அவன் திருநாமங்களை வாயார புகழ்ந்து பாடவும் அவனைப் போற்றி துதிக்கவும் சந்தர்ப்பம் அளிக்கும் தினங்கள் இந்த திருவிழா நாட்களே.

பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் வருடாந்த மகோற்சவம் மாசி மாதத்தில் வரும் அமாவாசை தினத்தன்று பதினாறாம் விழாவான தீர்த்தோற்சவம் நடைப்பெறத்தக்கதாக கொடியேற்ற விழாவுடன் ஆரம்பித்து தொடர்ந்து 14 நாட்களுக்கு விழா விமரிசையாக நடைபெற்று 15ம் நாள் இரதோற்சவமும் அதனையடுத்து 16ஆம் நாள் தீர்த்தோற்சவமும் நடை பெறும். இந்த விழாக்களுள் 10ஆம் நாள் மஞ்சமும் 12 ஆம் நாள் கைலாச வாகனமும் 14 ஆம் நாள் சப்பறோற்சவமும் ஏனைய குறிப்பிடத் தக்க விழாக்களாகும்.

பஞ்சகிருத்தியங்களுள் ஒன்றான படைப்புத் தொழிலைக் கொடியேற்றம் குறிக்கிறது.அதனைத் தொடர்ந்து வரும் விழாக்கள், காத்தல், அழித்தல், மறைத்தல்,அருளல் என்பவற்றைக் குறிக்கின்றன. தேர்த்திருவிழா சங்காரத்தை அதாவது அழித்தலையும் தீர்த்தத்திருவிழா அருளலையும் குறிப்பிடுகின்றன.இவ்வாறு ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவங்கள் இறைவனின் ஐந்தொழில்களையும்

நமக்கு நினைவூட்டுகின்றன. இந்த மகோற்சவ காலத்தில் வீரகத்தி விநாயகப் பெருமானது தரிசனம் பெற திருநெல் வேலியிலும் அயல் கிராமத்திலிருந்தும் அடியார்கள் ஆயிரக்கணக்கில் வந்தவண்ணமிருப்பர். மேலும் வருடாந்த உற்சவங்கள் கால வரையறையோடும் பக்தி சிரத்தையோடும் நடைபெறுவதற்கு பிரதம குருக்கள் முதற் கொண்டு அடியார்கள் வரை சகலரும் தங்கள் ஒத்துழைப்பை வழங்கி வருவது பாராட்டுதற்குரிது.

திருநெல்வேலிச் சிவன் கோயில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் அவர்களின் புத்திரர்களான சிவஸ்ரீ சதா யோகீஸ்வர குருக்கள், சிவஸ்ரீ சதா, சிவகுமாரக் குருக்கள் ஆகியோர் இவ்வாலயத்தில் நடைபெறும் சங்காபிஷகம், திருவிழாக்கள், மகோற்சவம் முதலிய விசேட தினங்களில் நடைபெறும் கிரியைகளில் பங்கேற்று பிரதம குருக்களுக்கு வேண்டிய ஒத்துழைப்பு நல்கி விழாக்களை சிறப்பாக நடத்தி முடிப்பார்கள். சிலசமயங்களில் இவர்களும் பொறுப்பேற்று விழாக்களை திறம்பட நடத்தி முடிப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ புவநேந்திர சர்மா, (ரவிஜயா) அவர்கள் ஆற்றி வரும் சேவைகள் போற்றத்தக்கவை. பெரும்பாலான பணிகளை அவரே பொறுப்பேற்று இயன்றவரையில் சிறப்பாக நடத்தி முடித்து அடியார்களின் நன்மதிப்பையும் பெற்றுள்ளார்.

இவ்வாலயத்தில் நடைபெறும் முக்கிய விழாக்களில் இணுவில் தர்ம சாஸ் தா குருகுல அதிபர், வேதாகம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ.தா. மகாதேவக் குருக்கள் அவர்கள் பங்கு பற்றி கிரியைகள் ஆகம விதிப்படி நடத்தி முடிப்பதற்கு ஒத்ததுழைப்பு வழங்குவது பாராட்டுதற்குரியது.

இன்னும் ஒரு முக்கிய விஷயத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது என நினைக்கிறேன். தொன்மை வாய்ந்ததும் திருவருட் சிறப்பு மிக்கதுமான இவ்வாலயத்தின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக விருந்து அயராது உழைத்து வரும் திருநெல்வேலி பெரிய நயினார் குடும்பத்தினரை – சிறப்பாக ஆலய அறங்காவலர் திரு இராமலிங்கம் சுரேஷ் அவர்களின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி வாழ்த்த வேண்டியது திருநெல்வேலி வாழ் சைவப் பெருமக்கள் கடமையாகும்.

பழங் கினற்றடிப் விநாயகப் பெருமான், தன்னை நம்பி தஞ்சம் அடைபவர்களுக்கு அபயம் அளிக்கும் தெய்வமாக விளங்குகிறார். தமது திருக்கடாட்சத்தை தங்கு தடையின்று எல்லோருக்கும் வாரிவழங்குகிறார். துன்பங்ளையும் இடையூறுகளையும் அவர் எளிதில் நீக்கி விடுவார் எந்ற நம்பிக்கை மக்களிடையே வேரூன்றி இருக்கிறது.


"சந்நிதி"
வாசகர்களுக்கு
எமது இதயங் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

******

*அருள் ஜீவலர்ஸ்*


Arul
Jewellers
3 Sea Street, Colombo 11
Telephone: 436331


எனவே,விக்கிரகங்களையே திருநெல்வேலி வாழ் மக்கள் கண்கண்ட தெய்வமாக ஏற்று அப்பெருமானை அல்லும் பகலும் அநவரதமும் போற்றி துதித்து வருவதைத் காணக் கூடியதாக உள்ளது.

அடியார்கள் அவரது சந்நிதியில், காதலர்கி கசிந்து கண்ணீர் உருகி தங்கள் நெற்றியின் இருபுறமும் குட்டிக் கொண்டு தோப்புக் கரணம் போட்டு வேண்டுதல் செய்வது, தேங்காயை சிதறுகாயாக உடைத்து நன்றி செலுத்துவது, ஆலயத்தை வலம் வருவது என்பன தொன்று தொட்டு நடைமுறையில் இருந்து வரும் வழக்கங்களாகும்.

வெள்ளிக்கிழமை, சதுர்த்தி, விநாயகப் பெருமானுக்கு உகந்த நிவேதனைப் பொருற்களாக சர்க்கரைப் பொங்கள், அப்பம் மாம்பழம், பலாப்பழம் மற்றும் கிழங்கு பயறு வகைகளைப் படைத்து வழிபாடு செய்வார்கள்.

ஸ்ரீ வீரகத்தி விநாயக பெருமான் தம்மை உள்ளன்புடன் வழிபடும் அடியார்களுக்கு எளிதில் இன்னருள் புரியும் கருணைக் கடல். அவர்களது துன்பங்களை நீக்குவதில் வல்லவர். அத்துடன் கல்வி, செல்வம், ஞானம், சகல கலைகள் ஆகியவற்றையும் வாரி



திருநெல்வேலி, பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி
விநாயகர்
சித்திரத் தேரில் பவனி வரும்
கண்கொள்ளாக் காட்சியினை
நாங்களும் அகக் கண்ணால் கண்டு
களிப்போமாக.

பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின்
பாதார விந்தங்களைப் பணியும்
அன்புத் தாயும், பிள்ளைகளும்.

வெள்ளவத்தை
கொழும்பு – 06
14 – 02 – 99

வழங்குவார்,

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலை ஞானம்
கற்குத் சரக்கன்று காண்

என்ற உமாபதி சிவாசாரியாரது அருள்வாக்கும் இங்கு கவனிக்கத் தக்கது.

சுருங்கக் கூறின், செந்தமிழும் சிவநெறியும் செழித்து வளரும் திருநெல் வேலியில் வாழ்கின்ற சைவப்பெருமக்களால் பெரிதும் விரும்பிப் போற்றப்படும் தெய்வமாக விளங்குபவர் பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானே. வினை தீர்க்கும் அந்தப் பெருமானின் திருநாமம் எந்த நேரமும் எமது நாவில் தவழ வேண்டும். எமது உள்ளமும் என்றும் அவரது சிந்தனையில் ஊறித்திளைக்க வேண்டும். அப்போது நாம் உலகில் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை.

எனவே, இன்றுள்ள அமைதியற்ற நிலைமை நீங்கவும் நமது நாடு சுபீட்சம் பெறவும் எல்லாம் வல்ல ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் சித்திரத் தேரில் பவனி வரும் இந்த நன்னாளில் அவனது பாத கமலங்களைப் பணிந்து வேண்டுதல் செய்வோமாக.

'அடியவருக் கென்றும்
ஆறுதல் அளித்திடுவான்
மிடியதனை நீக்கிடுவான்
மிளிரு திரு நெல்வேலிப்
பதியினிலே திருத்தலமாம்
பழங்கினற்றடியினிலே
கதி யருள வீற்றிருப்பான்
கணபதி தாள் போற்றி போற்றி'

– கவிமாமணி –

## மாங்காடு ஸ்ரீ காமாட்சி நாமாவளி
(உயிரெழுத்தில் காமாட்சி)



அன்பின் உருவமவள் காட்சி !
ஆற்றலில் சக்தியவள் காமாட்சி !
இன்னல்கள் தீர்த்திடுவாள் காமாட்சி !
ஈசனின் உடல் பாதி காமாட்சி !
உலகத்தை ஆள்பவளாம் காமாட்சி !
ஊக்கங்கள் தந்திடுவாள் காமாட்சி !
எதிலும் விளக்கிடுவாள் காமாட்சி !
ஏற்றம் பல கொடுப்பாள் காமாட்சி !
ஐயம் போக்கிடுவாள் காமாட்சி !
ஒப்பில்லா நாயகியாம் காமாட்சி !
ஓங்கார வடிவினளே காமாட்சி !
ஔடதம் நீ வாழ்வினிலே காமாட்சி !
ஃதே நான் வேண்டுவதும் காமாட்சி !

# MENAN TRADING COMPANY

GENERAL MERCHANTS, COMMISSION AGENTS
DEALERS IN LOCAL FOOD PRODUCTS

No. 82, 4th Cross Street, Colombo 11
No. 208, Prince Street, Colomo 11
Tel.: 324092





திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேர்த் திருவிழா சிறப்பு மலர்





திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய ஸ்ரீ சக்ர பூர்ண மஹா மேரு

Edited by : V. Varathasuntharam, Published by : Sivagami Ammal Publications, 39, 36th Lane, Wellwatte, Sri Lanka. Tel. : 596253.
Printed by : Unie Arts (Pvt) Ltd, No. 48 B, Bloemendhal Road, Colombo - 13. Tel.: 330195.

Rs. ரூபா. 30/-